திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 9 23—12—55 : வெள்ளி : விலை 3 அணா மலர்: 19

கொத்தலாவலை குதூகலப்படுகிறார்!

திராவிடத்தின் நிலப் பரப்பு-இயற்கை வளப்பங்கள், மக்களின் எண்ணிக்கை — அது போன்றே திராவிடத்தின் மொழி வழிப் பகுதிகள் என்ற முறையில் தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகியவைகளின் விவரங்களையும், அதே சமயத்தில் 1947-ம் ஆண்டு வரையும் அதற்கு முன்பும் ஏக இந்தியாவுடன் ஒட்டிக் கொண்டிருந்த பாக்கிஸ்தான் இலங்கை, பர்மா போன்ற நாடுகளின் இன்றைய விவரங்களையும் —திராவிட முன்னேற்றக் கழகம் புள்ளி விவரங்களுடன் தனது ஏடுகளிலும், பொது மேடைகளிலும் எடுத்துக் காட்டி வந்திருக்கிறது.

தமிழகத்தின் நிலப் பரப்பு—மற்ற வளப்பங்கள் ஆகிய அனைத்திலும் மிகச் சிறியதான இலங்கை, இன்றுஉலக் நாடுகளிடையே —அதிலும் வல்லரசுகளாக விளங்கும், ரஷ்யா அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், போன்ற நாடுகளுடன் உலக விவகாரங்களைப் பற்றிக் கலந்து பேசவும் அதற்காக அவ்வப்போது நடைபெற்று வரும் மாநாடுகளில், பேச்சுவார்த்தைகளில், பங்குகொள்ளவுமான உரிமைபெற்றிருக்கிறது.

இலங்கையின் தூதுவர்கள் உலக நாடுகளிடையே தமது நாட்டின் பெயரைக் கூறிப் பெருமைப் படுகின்றனர். வியாபார பிரச்னையிலிருந்து அரசியல் பிரச்னைவரை உரிமையுடன் கலந்து பேசுகின்றனர்;

தன்னைத் தட்டிக்கேட்க உலகில் எந்த அரசுக்கும் அதிகாரம் கிடையாது என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்து நடைபோடுகிறது இலங்கை!

1947-ம் ஆண்டுவரை ஏக இந்தியாவின் பிடிப்பிலிருந்து வந்த இலங்கைஇன்றுதனிஉரிமையுடன் ஆட்சி நடத்துகிறது. அந்த ஆட்சி முறை கோணல் தன்மையுடையதா அல்லது நேர்மைப் பண்புடன் நடக்கிறதா என்பதைப் பற்றி தட்டிக்கேட்கஆரியஜோதியானாலும் சரி—அல்லது அகில உலக ஜோதிகளானாலும் முடியாது!

இலங்கை — இந்தியாவைவிட பெரியதா இல்லை — இன்னும் சொல்லப்போனால், தமிழகத்தை விட, என் கேரளத்தைவிட சின்னஞ் சிறு நாடுதான்! மக்களின் எண்ணிக்கையே (அங்குள்ள 10 லட்சம் தமிழர்களையும் சேர்த்து) 80 லட்சம் என்றுதான் கணக்கிடப்பட்டிருக்கிறது. தேயிலை—ரப்பர் ஆகிய விளைபொருள் தவிர வேறு ஒன்றும் அவ்விடம் வாங்குவதற்கில்லை. இருப்பினும் இலங்கை, உலக நாடுகளிடையே தொடர்பு கொள்ளும் அளவுக்குத் தனி உரிமை பெற்றிருக்கிறது.

இலங்கை மட்டுமா—இலங்கையைவிட சின்னஞ் சிறு நாடுகளுக்குக்கூட இவ்வித உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இவ் விவரங்களை நாம் இடித்திடித்துக் கூறியிருக்கிறோம். எனினும் தென்னாட்டிலுள்ள தேசிய முகாமினர்களில் பலருக்கு தி. மு. கழகத்தின் எடுத்துக்காட்டுகள் புரிவதில்லை. புரிந்துள்ள சிலரோ தங்கள் அரசியல் அறிவாற்றலை டெல்லி தேவதைகளிடம் அடகு வைத்துவிட்டு ஏக இந்தியா என்ற பல்லவிக்குத் தாளம் போடும் விசித்திர நடவடிக்கைகளில் காலங்கடத்தி வருகின்றனர்!

முன்பு ஏக இந்தியாவுடன் இணைந்திருந்த இலங்கை, பாகிஸ்தான், பர்மா, போன்ற நாடுகள் தென்னாட்டுத் தேசிய வாதிகளைப் போல அர்த்தமற்ற பேச்சுகளில் காலத்தை வீணாக்காமல் தங்கள் நாடு, மொழி, அரசியல், மக்கள் வாழ்வு ஆகியவைகளை முதன்மையாகவும், பிற எல்லா நாடுகளுடன் தோழமையுடன் இருக்கும் பிரச்னையை அடுத்த படியாகவும் வைத்து முன்னேறுகின்றன.

இவ்வளவையும் ஏன் குறிப்பிடுகிறோமென்றால். சென்ற வாரம் ஐ. நா. சபையில்—அதன் சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சி — தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, உடனடியாக நடை முறைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அந்த நிகழ்ச்சி என்ன? — 16 நாடுகளை, ஐ. நா. சபை தனது உறுப்பினராக ஏற்றுக் கொண்ட தீர்மானம்தான். தோழர்களே, அந்த 16 நாடுகளில் இலங்கையும்,

நக்கீரன்

நேபாளமும் இடம்பெற்றிருக்கின்றன. இத்தீர்மானம் சென்ற வாரம் ஐ. நா. சபையின் முக்கிய குழுவாகிய தர்மகர்த்தா சபையின் (Security Council) ஒப்புதல் பெற்று ஐ. நா, பொதுச்சபையில் ஏகமனதாக நிறைவேறப்பட்ட அடுத்த நிமிடமே, அந்த சபையின் பிரத்யேகப் பார்வையாளர்கள் அமரும் இடத்தில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்த இலங்கைப் பிரதிநிதி குணதிலகா அவர்களை பிரிட்டன் பிரதிநிதி மலர்ந்த முகத்துடன் வரவேற்று கைலாகு கொடுத்து தமக்கு அடுத்த இடத்தில் அமர்த்திப் பெருமை படுத்தினாராம்!

அதுபோலவே மற்ற வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனப் பிரதிநிதிகளும் வரவேற்றனராம்.

அதைவிட இன்னும் விரிந்த அளவுக்கு இந்தியப் பிரதிநிதி வி. கே, கிருஷ்ணமேனன் மனமாரப் பாராட்டினாராம்!

ரஷ்யா—அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், தேசிய சீனா, போன்றவல்லரசுகளுடன்இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் ஐ நா. சபையில் இலங்கை தலை நிமிர்ந்து வீற்றிருக்கும், உரிமை பெற்றுவிட்டது!

இந்த மகத்தான செய்தியை அறிந்துதான் இலங்கைப் பிரதமர் கொத்தாலாவலை, இலங்கையிலே குதூகலமடைந்திருக்கிறார். ஐ. நா. சபையின் முடிவு இலங்கைக்கு எட்டியதும், பத்திரிகை நிருபர்கள், இலங்கைப் பிரதமரைப் பேட்டி கண்டிருக்கின்றனர்; அதுபோது அவர் "இலங்கைக்கும்—எனக்கும் யோகம் அடிக்கிறது' ஐ நா. சபையில் நம் நாடு இடம் பெற்றதானது இலங்கையின் பெருமையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறதென்பதை நம்மைவிட உலக வல்லரசுகளே நன்கு உணர்ந்திருக்கும்" என்று பூரிப்புடன் குறிப்பிட்டு எல்லா நாடுகளுக்கும் நன்றி தெரிவித்திருக்கிறார், இலங்கை முழுவதும். ஒரே குதூகலமாம்!

அதுபோலவே நேப்பாள நாடும் ஐ. நா, சபையில் இடம் பெற்றிருப்பதை நம் தென்னாட்டுத் தேசியத் தோழர்களுக்கும், ஏக இந்தியா என்ற வரட்டுக் கூச்சல் போடும் அரசியல் குருட்டாம் போக்குடையவர்களுக்கும் நினைவூட்ட விரும்பிகிறோம்.

இலங்கையும், — நேப்பாளமும் திராவிடத்தைவிட அளவிலோ மற்ற அம்சத்திலோ உயர்ந்ததல்ல நாம் மேலே எடுத்துக்காட்டியுள்ளபடி, தென்னாட்டின் மொழி வழிப் பகுதிகளாகிய தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய தனித்தனி நாடுகளாக ஒப்பிட்டுப் பார்த்தாலும், இலங்கை நேப்பாள நாடுகள்சிறியவைகளே யாகும். எனினும்அந்நாடுகளுக்கு ஐ. நா. சபையில் இடம் கிடைத்திருக்கிறது.

ஆனால் திராவிடத்திற்கோ... அல்லது தமிழகத்திற்கோ அவ்வித உரிமையில்லை. இத்தனைக்கும் ஐ. நா. சபையில் கடந்த10-ஆண்டுகளாக இந்தியாவின் சார்பில நேரு சர்க்காருக்கு-இந்தியாவுக்கு, புகழையும் பெருமையும் தேடித்

(8-ம் பக்கம் பார்க்க)

நேபாளமோ நிமிர்ந்து நிற்கிறது! - அந்தோ திராவிடமே நீயோ...

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா!

கௌதமன்

9—12—55 தொடர்ச்சி

11

இளவரசி ரஸியாவைப் பற்றி இப்போது என்னென்ன எல்லாமோ பேசிக் கொள்ளப்பட்டது! அவளுக்கு எதிர் முகாமமைத்துக் கொண்டிருந்த அரசியல் மேதைகளுக்கோ இப்போதெல்லாம் ரஸியா துரோகியாக தென்பட்டாள், பரம வைரியாகத்தான் அவள் தோன்றினாள்...! மக்கள் மன்றத்திலே இவளைப்பற்றி பலப்பல விதமாகப் பேசும் வாய்புகளும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய புதிய சந்தர்ப்பங்களை ரஸியாளே ஏற்படுத்திக் கொண்டிருந்தது தான் மிகவும் துரதிருஷ்டம் வாய்ந்ததாகும். அவர்கள் குறைகூறுவதற்கேற்ப தனது காதல் நினைவுகளுக்கு பகிரங்கமாகவே அவள் எழில் வண்ண ரேகைகளை ஏனோ அமைத்துக் கொண்டிருந்தாள்! பாவம் அரசு கவிழ்ந்து, தனது இதய மன்னன் ஜமாலுக்கும் ஆபத்துக்கள் சூழ்ந்து விடுமே என்று ஏனோ அவள் எண்ணவில்லை!

இதுபோன்ற காதலரங்கங்களிலேசதிராடுகின்ற வீரர்களுக்கு சிற்சில வேளைகளிலே இயற்கையான தைரியங்கள் எழ வாய்ப்பில்லா விட்டாலும், அசட்டுத் தைரியமாவது எழ வாய்ப்புக் கிடைப்பதுண்டு! இன்னது செய்தால் இன்னது விளையுமென்பதை அறிந்திருந்தும் சிற்சில வேளைகளிலே, இவர்கள் எண்ணத்திலே தோய்ந்தூறும் சிறு ஆசை—சபலம் காரணமாக மிகத் துணிவு கொள்ளுகிறார்களிவர்கள்!!

பெற்றவரும், கூடப்பிறந்தவரும் அருகிலிருக்கும் போதும்...தாய் தன்னுடன் மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கும் போதும், தனதருமைக் காதலன் மட்டும் எதிரேவரக் கண்டு விட்டால் போதும்...அவன் இதயமே துளைக்கப்படும்படி, தனது கூரிய பார்வையால்—விவரமும், விளைவும், சூழ்நிலையுங்கூட அறியாமல், பலரையும் வியப்புள் ஆழ்த்தும் வண்ணம் அவனை விழியார ஆலிங்கனம் செய்து கொண்டு விரகதாபத்தைத் தணித்துக் கொள்ளும் வேடிக்கைகாரர்களுமுண்டு...! அப்படிப்பட்ட நேரத்திலே அவர்களிடையே எழுவது தைரியமல்ல...அசட்டுத் தைரியம்! சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடாதென்ற குருட்டு மனோபாவம்...! அவ்வளவுதான்...!!

எனவே இத்தகைய குருட்டு மனோபாவத்தைத்தான் இளவரசி ரஸியாளும் பெற்றிருந்தாள்...பலர் காணும் வண்ணம்—பலரும் வியந்து பழிக்கும் வண்ணம் — விளைவறியாது வெளிப்படையாகவே தனது எண்ணத்தை வெளிக்குக் காட்டிக் கொண்டாள்! அதோடு தன் காதலையும் பலியாகிக்கிக் கொண்டாள்!!

ரஸியாவின் புதுக் காதல்பற்றி பலப்பல கேள்விகள் எழுப்பப் பட்டன...! மக்கள் மன்றத்திலே—பிரபுக்கள் ரகசியக் கூட்டங்களிலே — ஓம்ராக்களின் மத்தியிலே—இவைகளெல்லாம் உயிர் பெற்றப் பிரச்னைகளாயின...! அப்படியவர்கள் ரஸியாவின் ஒழுங்கு முறைபற்றி ஆத்திரத்தோடு கேட்ட கேள்விகளிலே மிக மிக ஆச்சர்யமும், கோபமும் நெளியும் ஓர் சிக்கலானக் கேள்வியொன்றைக் கீழே பாருங்கள்...!

"What decency was left to one who allowed her Abyssinian master of the horse, to lift her on and off her steed, by raising her up under the arms...?"

'When Kings rode to Delhi"
By 'Cabrielle Festing'

"அந்த அபிசீனியக் குதிரைக்காரப் பயல் தன்னைக் குதிரையினின்றும், இறங்கும் போதும், ஏறும்போதும், தனது இரு புஜங்களுக்குக் கீழும் கரம் கொடுத்து மேலும் கீழுமாகத் தூக்கி நிறுத்த அனுமதிக்கும் இளவரசி ரஸியாவிடம் என்ன கௌரவத்தையும், ஒழுங்கையும் எதிர்பார்ப்பது! என்ன நன்னடத்தை வாழுகிறது இங்கே!..."

இப்படியொரு கேள்வி...!

ஆபத்தான கேள்வி என்கிறீர்களா! அதைத்தான் உள்ளபடியே அனுமதித்தாள் ரசியா...! அசட்டுத் தைரியம் என்கிறோமே அதுதானிது!!

அரண்மனைக்கு வெளியே குதிரையில் போவதையே இஸ்லாம் அனுமதிக்காது அதிலும் முகமூடியில்லாத வனிதை தன் நிலவொளி வதனத்தை வெளிக்குக் காட்டிக்கொண்டு குதிரைச் சவாரி போவதும், அவனை அவளின் காதலன் (கள்ளத்தனமான...!) கரம் கொடுத்துப் பலர் எதிரில் தூக்கி குதிரைமீதமர்த்துவதையும் எப்படி அனுமதிக்கும்! எனவேதான் புயல் கிளம்பியது!

எவ்வளவு கஷ்டங்களுக்குப் பிறகு கிடைத்த அந்த அரசபீடம், எவ்வளவு சீக்கிரம் பறிபோகும் தன்மையது என்பதற்கு ரசியாளின் சம்பவமே போதிய சான்றாகும்! அந்த நிலைக்காத அரசபீடம் நிலைக்க அவள்பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா? நஞ்சமா! பள்ளிவாசல்—குதப்மினாரின் விளிம்பு—மாளிகையின் சோலைவெளி—இப்படி எங்கெங் செல்லாமோ அவள் சிந்திய கண்ணீர்த் துளிகள்தான் எவ்வளவு! அப்படிக் கண்ணீரிலே நீந்திப் பெற்ற அந்த அரும் பெரும் டெல்லிப் பீடம் இப்போது அழிவைத் தேடி ஓடிக்கொண்டிருந்ததும்—அதை ரசியாளே மேலும் மேனிலும் தன் செயலாலேயே துரிதப்படுத்திக்கொண்டிருந்ததும்—எவ்வளவு கொடுமையானது வேதனையானது என்று பார்க்கின்றபோதுதான், காதல் நோய் கண்டவரின் அளவுகடந்த சித்த சுவாதீன மற்றப் பரிதாபத்தன்மை தெற்றென விளங்குகிறது! எதையும் செய்ய முடியாதது மட்டுமல்ல செய்யக் கூடாத ஓர் குழப்பான நிலை! அதுதான் அவளுக்குக் காதல் தந்த நிலையான பரிசு!

ஆனால் இதன் எதிரொலிதான் புயல் வீச ஆரம்பித்துவிட்டது அரண்மனையில்! மூன்றாண்டின் அரச சேவையை மறந்த கும்பல் இந்த ஒரு சில காரணங்களைப் பெரிதாக ஆக்கி, அவளின் மணி மகுடத்தையே இடறி வீழச்செய்ய அரும்பாடு பட ஆரம்பித்தது

நிலவு தரும் ஒளிமதிக்கு நலிவுதரும் கலங்கக் குவியல்களைப்போல மாளிகையிலே கரம் கூப்பித் தொழுதோரெல்லாம் கூட, மன்றத்திலே அவளுக்கெதிராகவே எதிர்த்து நிற்க முனைந்தனர், ஆட்சியின் சக்தியையும் அரசைக் கவிழ்க்கும் வாய்ப்பினையும் பெற்றிருந்த 'நாற்பதின்மர்' என்றழைக்கப்பட்ட கொலு மண்டபத்தின் ஏகபோக மிராசுக்காரர்களான அந்தத் துருக்கியப் பிரபுக்கள் மதத்தலைவர்களுடன் கூடிக் கூடிப் பேசினர்; பகிரங்கமாக அல்ல—இரகசியமாகத்தான்!!

துருக்கியப் பிரபுக்களும், ஓம்ராக்களும் ஒன்றாக கூடிப்பேசுகிறார்களென்றால் நாட்டின் நடைமுறையிலேயும் சரி—ஆட்சி முறையிலேயும் சரி—ஏதாவதோர் மாற்றம் நிச்சயம் நிகழத்தான் செய்யுமென்று உறுதியான நம்பிக்கைக் கொண்டிருந்த மக்களுக்கு மீண்டுமோர் கொந்தளிப்புச் சூழ்நிலைதான் பரிசாகத் தரப்பட்டது!!

ஆட்சியை எவருக்கும் எதிராகவும் ஏன் தங்களின் மனச்சாட்சிக்கு எதிராகவும் திருப்பும் வல்லமை படைத்திருந்த துருக்கியப் பிரபுக்களான அந்த நாற்பதின்மர், சிக்கலான இந்தச் சூழ்நிலைமைஉருவாக்கிய நேரத்திலே எடுத்த பிரயாசைகளைவிட, அதை மேலும், மேலும்வலுப்படுத்திக்கொண்டேபோக எடுத்த சிரமம்தான் உள்ளபடியே வியக்கத்தகுந்ததாக இருந்தது! எதிர்பாராத இடங்களுக்கெல்லாம் ஏவலர்கள் விடுக்கப்பட்டனர், நாட்டின் அதிகாரத்திற்குட்பட்ட அத்தனை கவர்னர்களுக்கும், மறைமுகமாக அன்றாடத தகவல்கள் அனுப்பப்பட்டு வந்தன! இரகசிய சந்திப்புகளோ ஏராளம்! இத்தனையும் எதற்கு? ஒரு இளம் பெண்ணை அதுவும் ஆளத்தெரிந்த அரசியாகவும் வீற்றிருந்த இளம் கன்னியை சிம்மாசனத்தினின்றும் நீக்குவதற்கு!! காரணம்? அவள் தன் முறையில்லாக் காதலால், நாட்டின் நடைமுறைக்கே இணையற்றதோர் பெருங்களங்கம் விளைத்து விட்டாள் என்பதற்காக!!

ஹூம்! அதுமட்டுந்தானா காரணம்? கானகத்திலே விளையாடிடும் புள்ளிமான் பார்ப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணம், அழகாக இருப்பது முதற் குற்றம்! அதுவும் வேடனின் கூரியகண்களிலே மட்டுமல்ல; அவனின் கொடிய கண்ணியிலேயும் வீழ்ந்து சிக்கியது இரண்டாவது குற்றம்! கண்ணியிலே வீழ்ந்ததையும் மறந்து வேடனிடம் கொஞ்சிக் குலவிட வருவது மூன்றாவது குற்றம்! ஆனால் ரஸியாளைப் பொறுத்தமட்டில் மானின் குற்றங்களைவிட அதிகமான தவறுதல்களை அவளிழைத்திருந்தாள்!!

அரசாள வேண்டுமென்ற பெரும் சுமையைத் தூக்கி வைத்திருந்த அவள், ஏற்கனவே ஆட்சியைத் தங்களின் ஏகபோக மிராசாக்கி வைத்திருந்த நாற்பதின்மரின் போக்குக்குப் பெரும்தடைக் கல்லாயிருந்தது முதற் குற்றமாகும்!

இந்த ஒரு குற்றம்தான், மற்றவரை, மற்றவைகளையும் தேடியும், ஓடியும், சேகரிக்கச் செய்தது! மற்ற குற்றங்களெல்லாம், முதற் குற்றத்தை நிலைநாட்டஅல்ல, அதனை மனதிலேயே இரகசியமாக தங்களின் பெரு வெறுப்புக்கு அடிப்படையாக மறைத்து வைத்துக் கொண்டு; மற்ற சாதாரணமானவைகளைக் கறை படிந்த காரணங்களாக மெருகிட்டு, அதனை வெளிப்படையாகவே காட்டிக் கொள்ள செய்யப்பட்ட சதியாகும்!!

கிரேக்கநாடு, குறிப்பாக ஏத்தென்ஸ் பொன் நகரம், சாக்ரடீஸ் வாழ்ந்த காலத்திலே (கி, மு 470 to கி. மு. 399) ஓர்முறை ஸ்பார்ட்டா என்ற அண்டை நகரிடம் சிக்கியபோது அங்கே முப்பதின்மர் கொண்டதோர் கொடுங்கோன்மை ஆட்சி அமைக்கப்பட்டது! அந்த முப்பதின்மர் அங்கே புரிந்த அட்டகாசமும், ஜனநாயகத்தின் முனையிலே அவர்கள் புரிந்த அலங்கோலமும் சொல்லித்தரமல்ல! பேரறிஞன் சாக்ரடீஸ் அன்று முப்பதின்மர் புரிந்த அநீதிச் செயல்களை அறவே கண்டித்து அதனை வெறுக்கவும் செய்தான். நல்லவேளையாக அவனுயிருக்கே உலைவைக்க இருந்த அந்த அலங்கோல ஆட்சி திடீரென்று கவிழ்ந்து. ஒழிந்தும் போய் விட்டது! இல்லையேல் கிரேக்கம் அநீதிக் காடாகியிருக்கும்!!

டெல்லிப் பீடத்தைச் சுற்றியிருந்த இந்த நாற்பதின்மரை நினைக்கும்போது, ஏத்தென்ஸின் அந்த முப்பதின்மர் கவனம் தான் நமக்கு வருகிறது! இளவரசி ரஸியாளுக்கு முதலிலிருந்தே தொல்லை கொடுத்து, அவளை மகுடம் புனையாதிருக்கப் புது முறைகண்ட அவர்கள், அவள் ஆளும் பொறுப்பேற்றபின்னும், ஏதோ சில பல நேரங்களைத் தவிர, மற்றய நேரங்களிலே அவளைப் பற்றி பழுதெண்ணத்தான் செய்தனர்! உலக மேதை வள்ளுவர் கூறுவதைப்போல,

"பழுதெண்ணும் மந்திரியின்
—பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்!" குறள்.

என்பதைப்போல—தவறான வழிகளை மனதிற்கொண்டு உதட்டிலே உறவாடிக் கொண்டிருந்த அந்த நாற்பதின்மரின் மத்தியிலே ரஸியாள் அரசோச்சிக் கொண்டிருந்ததைவிட எழுபதுகோடி பகைவரின் மத்தியிலே சிறையுண்டு கிடந்திருந்தாலும் பாதகமில்லைதான்!

நெஞ்சிலே பகைமை—நெற்றிருக்கும் புருவத்திற்கு மிடையிலே இருக்கின்ற சுருக்கங்களிலே வஞ்சகம்-ஆனால் உதட்டிலே மட்டும் மகிமைப் பிரதாபங்கள் இப்படியொரு புதிய முறையிலே உறவாடுவோருமுண்டு! அத்தகையவர்கள் தான் இவர்கள்!!

ஏதோ ஓர் காரணம் இதயத்திலே; எவ்வளவோ எரிச்சல் நெஞ்சிலே; தினவெடுக்கும் தோள்களிலே சதித்திட்டம்; இவையத்தனையையும் நெளிய விட்டுக் கொண்டு மக்கள் நம்பும் காரணம்—மற்றவர் சினம்கொள்ளும் காரணம்—தேடிக்கண்டுபிடிக்கப்பட்டு சொல்லவும் பட்டது! ரசியாவின் பலவீனம் பாவம் நன்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டு விட்டது!

அந்தப் பிரபுக்களும், ஓம்ராக்களும் நினைத்திருந்தால் ஆதியிலிருந்தே அவளைத் திருத்தியிருக்கலாம்; அவளின் தவறை எடுத்துக் காட்டியிருக்கலாம்; அல்லது இவர்களையும் அதையெல்லாம் அசட்டை செய்யாமலிருந்து விட்டிருக்கலாம். ஆனால் அவள்மீது இவர்கள் கொண்ட பொச்சரிப்பினால் — பொறாமையினால் இன்னும் சொல்லப் போனால் வெறுப்பினால் அவளைப் பலியாக்கவே திட்டம்தயாரித்தனர் அந்தப் பிரபுக்கள்!

அவள் மீதிருந்த சிறு சிறு குற்றங்களையெல்லாம் ஒருங்கே திரட்டி, அவைகளைப் பெரும், பெரும் தவறுதல்களாக்கி; அவற்றை அரசியலோடும் பிணைத்து; அவளை அடியோடு துளைத்துவிடத் தீர்மானித்தனர்; பழித்தனர் மக்கள் நம்பு மளவுக்கு மாச்சர்யத்தையும் வளர்த்து விட்டு விட்டனர். அந்த மகானுபாவர்கள்! இல்லையேல் ரசியாளின் ஆளும் திறமைக்கும் நல்லெண்ணத்திற்கும், குடிகள் பால் அவள் கொண்ட அன்பிற்கும், அவளோர் இணையில்லாத பேரரசியாகி புகழ்வானத்திலே ஒளி விட்டுக்கொண்டிரும்பாள். ஆனால் இவர்களின் தூற்றலினால் மட்டுமே அவளின் புகழொளி, கொஞ்சம் மங்கிப் போனதாகத் தெரிந்தது. இதை நாம் கூறுவதைவிட ஓர் சரிதம் ஆய்ந்த முகமதிய எழுத்தாளரோ கூறுவது மிகவும் பொறுத்தமானதாக இருக்குமென்று நம்புகிறோம்.

"Razia was just, great, and sagacious She was a patron of of the learned. She loved her subjects. But for the idiotic

8-ம் பக்கம் பார்க்க

சிங்காரத் தமிழகத்தில் சீனத்துச் சுவர் எழுப்புவீர்!

கீழவைப்பாறு, மாறன்

இயற்கை அன்னை தன் அளவற்ற அன்பால் அழகு படுத்தி வைத்திருக்கும் தமிழகத்திலே சில நேரங்களில் சோதனையைத் தந்து வேதனையை அதிகரிக்கச் செய்து விடுகிருள். இவ்வாண்டும் நவம்பர் திங்களிலே வீசிய புயலும் பெய்த மழையும் பொங்கிய கடலும் தஞ்சை—இராமனுதபுரம்—மதுரை — திருச்சி — போன்ற மாவட்டங்களிலே பிணமலைகளைக் குவித்தது. கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள அழிவு ஏற்பட்டு விட்டது. எஞ்சியோரை வீதியிலேகூட அல்ல—அழிந்துபோய்க் கிடக்கும் பொட்டல் காடுகளிலே நின்று தத்தளிக்கச் செய்தது. சொத்துச் சுகமிழந்து உற்ருர் உறவினர்களை இழந்து—அழுது புலம்பிய ஆயிரமாயிரம் குடும்பங்களை உடனடியாக ஆறுதல் வார்த்தைகள் கூறி அவர்களுக்குப் பரிகாரம் தேடப் பறந்து சென்ருர் சென்னை முதல் அமைச்சர் காமராசர்.

நம்முடைய தென்னகத்திலே புயல் விளைவித்த கேட்டினைப் பார்த்து ஆவன செய்ய—ஆசிய ஜோதி பறந்து வரவில்லை. வடநாட்டிலே வெள்ளம் ஏற்பட்டதும் பறந்தார்—பறந்தார்! சுற்றி சுற்றிப் பறந்தார் விமானத்தில். இதிலும் அவருடைய ஓரவஞ்சனை தெரிகிறது தெளிவாக நமக்கு.

அக்டோபர் திங்களிலே சுற்றுலா வந்தபோது மலர்பட்டு மேனி வலிக்கிறது என்று சொன்னேமே! அத்தகைய அன்புள்ளம் கொண்டோர் புயலாலும் வெள்ளத்தாலும் அடிபட்டு இருள் கப்பிய இதயத்தினராய் — இனி வாழ்வு கிடைக்குமா? என்ற கேள்விக் குறிகளுடன் வாழும் மக்களைப் பார்க்க வரமுடியவில்லை அவருக்கு. அன்று நகரங்கள் வாழ்த்தும் வரவேற்பும் தந்தது—இன்று அவைகள் நரகமாகி விட்டன—அவைகள் நம் கண்ணுல் பார்ப்பதா? என்ற முடிவா (!)

'அழுது அழுதும் பிள்ளை அவள் தானே பெறவேண்டும்' என்று சொல்வதைப்போல இனப் பற்றும் இதயப் பாசத்தோடும் காமராசர்தான் சென்ருர்; விம்மியழும் மக்களைக் கண்டார் — விசனம் விடுக, விமோசனம் கிடைக்கும் என்ருர்! கண்ணீர் உகுக்கும் தாய்மார்களைக் கண்டார்—கலங்காதீர் என்ருர்! வெள்ளத்திலே மிதந்து வரும் பிணங்களைக் கண்டார்—சிறு பிள்ளைபோல கலங்கினுர்! பச்சைப்பசேலென காட்சி தந்த பயிர் பச்சைகள், மரஞ் செடி கொடிகள், தோப்புகள், வயல்கள், காடுகள் அழிந்து கிடந்ததைப் பார்த்தார்-அழுதார்! இடிந்து கிடந்த வீடுகளையும் நெஞ்சம் இடிந்து போய்க்கிடந்த மக்களையும் காண வெள்ளத்திலே நீந்தினுர்— கண்டார்! அஞ்சற்க அவசியமான நடவடிக்கை அவசரமாக எடுத்துள்ளோம் என்று சொன்ன போதே! அவர்களின் பாதித்துன்பம்பொசுங்கியிருக்கும் நாடெங்கணுமுள்ள நல்லோர்கள்—தி. மு. கழகம் உள்ளிட்ட கட்சிகள்—தனிப்பட்ட அமைப்புகள் தந்துதவும் பொருளாலும் அன்பாலும் அரசாங்கத்தின் உதவியாலும் ஓரளவு நிம்மதி கொண்டுள்ளனர். அரசாங்கம் விரிவான தீவிரமான நடவடிக்கைகள் மூலம் அவர்கள் வாழ்க்கையை முறையாக அமைத்திட ஆவன செய்திடுமென நம்புகிறேம். முதல் அமைச்சருக்கு இத்தோடு கடமை முடிந்ததா? அல்லவே அல்ல!

தினமணி ஏடு 7-12-55 இதழில் 1681-ம் வருடம் முதல் தஞ்சைக்கு பீடை பிடித்த மாதமே என்ற தலைப்பில்;—

"நவம்பர் 30-ம் தேதி தஞ்சை ஜில்லாவுக்கு சனியன் பிடித்த நாளாய் போய்விட்டது. 1952 ஆண்டில் அடித்த கோரப் புயலும் நவம்பர் 30-ந் தேதி ஆரம்பமாகி ஜில்லாவைச் சின்னு பின்னுப்படுத்தியது. இந்த 1955-ம் புயலும் நவம்பர் 30-ந் தேதி மாலை துவங்கி துவம்சம் செய்து விட்டது. முதல் புயல் ஞாயிற்றுக்கிழமை, இப்பொழுது புதன் கிழமை அது கார்த்திகை 14-ந் தேதி இது 15-ந் தேதி அதுதான் வித்தியாசம், தஞ்சை ஜில்லாவின் சரித்திரத்திலேயே நவம்பர் மாதம் என்ருல் குலை நடுங்கச் செய்கிறது. முற்கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தெரியவரும்.

1681-ம் வருஷத்தில் நவம்பர் 10-ந் தேதி வியாழக்கிழமை பறங்கிப்பேட்டையில் ஆரம்பித்த புயல் தெற்கே கடும் கோரத்துடன் தஞ்சை ஜில்லா தரங்கம்பாடியைத் தாக்கிற்ரும் 3 நாட்கள் அடித்ததாம். கடலிலிருந்த கப்பல்கள் நாசம்; ஜனங்கள் உயிர் பிழைக்க ஊரை விட்டுஓடினுர்கள்கடலும்பொங்கி மழையும் பெய்து வீடுகள் நாசம் தரங்கம்பாடியில் கோரப் புயலில் சிக்கிய கப்பல் 27 பேர்களோடு (வெள்ளையர் இந்தியர்) மூழ்கி அனைவரும் இறந்தனர்.

அப்பொழுது நாகப்பட்டினமும் கடுமையாகத் தாக்கப்பட்டு வீடுகள் நாசமாயின. ஏராளமான பொருள் நஷ்டம். அப்பொழுது அங்கிருந்த டச்சு சோல்ஜர்கள் இடிந்து விழுந்த வீடுகளில் நுழைந்து கையில் அகப்பட்டதையெல்லாம் சுருட்டிச் சென்ருர்கள். நாகப்பட்டினத்தில் புயலின் கோரம் தாங்காமல் 2000 பேர்கள் ஒரு கோயிலுக்குள் தங்கினுர்கள். கோயிலும் இடிந்து விழுந்தது! அவ்வளவு பேரும் மாண்டனர் நூற்றுக் கணக்கான மீனவர்கள் மேடான இடங்களில் அடைக்கலம் புகுந்தனர். மேடுகள் அடித்துக்கொண்டு போகப்பட்டு உயிர் துறந்தனர். 14000 பேர்கள் அந்த நவம்பர் புயலில் மாண்டனர், என்று கணக்கெடுக்கப்பட்டது. 3-பகல் 3-இரவு அடித்த புயல் இது!

1853-மார்ச்சில் ஏற்பட்ட சூருவளிக் காற்றினுல் 75,000. மாடுகள், ஒருலட்சம் ஆடுகள், 41,000 வீடுகள், கணக்கில்லாத பலவிருட்சங்கள் மன்னுர்குடி, திருத்துறைப் பூண்டித் தாலுகாக்களில் நஷ்டம். 1859 ஏப்ரலில் ஏற்பட்ட சூருவளியால் ஆற்றங்கரைகள் எல்லாம் நாசமாயின, வீடுகள் தூளாயின. ஏராள உயிர்ச்சேதம், தரங்கம்பாடிக்கும் கோடிக்கரைக்கும் நடுவில் 30 கப்பல்கள் மூழ்கின. 'மானர்க்' என்ற பிரிட்டிஷ் கப்பல் மூழ்கி 200 கூலிகளும் புதைந்தார்கள்.

1871 நவம்பர் 6, 7, தேதிகளில் பெரும் புயல் வீசியது, தரங்கம்பாடி அதற்கு கேந்திரஸ்தானம். நாகப்பட்டினத்தில் படுமோசம் விளைவித்தது. வீடுகள் நாசம். அந்தத் தேதிகளில் சென்ற வாரத்தைப் போல் கும்பகோணத்தில் 10. 6 அங்குல மழை.

1880 நவம்பரில் மறுபடியும் கோரப்புயல். திருத்துறைப் பூண்டிக்குக் கடுஞ்சேதம் விளைவித்தது. அநேக நகரங்கள் வெள்ளக்காடாயின. ரஸ்தாக்கள் எல்லாம் பிய்த்தெறியப்பட்டன. தஞ்சாவூர் பக்கத்தில் உள்ள பூக்குளம் என்ற ஊரில் ஒரு தெருவில் எல்லா வீடுகளும் விழுந்து நாசமாயின. தஞ்சாவூரில்700 வீடுகள் இடிந்து விழுந்தன, நாகப்பட்டினம் தாலுக்கா முட்டம் கிராமமே இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. எல்லாம் சர்வநாசமென்று ஜில்லாக் கலெக்டர் ரிப்போர்ட் கூறிற்று.

1884 நவம்பர் 30-ந் தேதி ஒரு நாளில் 21 அங்குல மழை. நன்னிலம், திருவாரூரில் பெய்து வாரக்கணக்கில் கிராமங்கள் தண்ணீரில் மூழ்கிப் பயிர்கள் எல்லாம் நாசம். 6 லட்ச ரூபாய் கிஸ்தி வஜா செய்யப்பட்டது. வீடுகள் மரங்கள் எல்லாம் நாசம் அப்பொழுது. திருத்துறைப் பூண்டிக்கு ஏற்பட்ட சேதத்தைக் குறித்து கலெக்டர் குறிப்பிடுகையில் " தனிப்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டநஷ்டம் கணக்கில் அடங்காதது " என்று கூறியுள்ளார்.

1903 நவம்பரில்சென்னை, தரங்கம்பாடி ரஸ்தாவிலுள்ள கொள்ளிடம் பாலம் அடித்துக் கொண்டு போகப்பட்டது. இப்பொழுது தான் அங்கு வேறுபாலம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலே குறிப்பிடப்பட்டதெல்லாம் சுமாரான மதிப்பீடுதான். தஞ்சை ஜில்லா வெள்ளத்தாலும் புயல்களாலும் நூற்றுக் கணக்கான வருஷங்களாகத் தாக்கப் பட்டு அடைந்துள்ள நஷ்டத்தைக்கணக்கிடுவதாகாது. மேட்டூர் அணை கட்டிய பிறகு வெள்ளத்தால் ஏற்படும் சேதம் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. ஆனுல் புயல் நிரந்தரமாக ஜில்லாவைப் பிடித்த பீடை போலும்!

1952-ல் நவம்பர் 30-தேதி புயல் நாகப்பட்டினத்துக்கு வடக்கில் புகுந்து அட்டகாசம் புரிந்தது. 5-மைல் சுற்று வட்டாரம் வெள்ளத்தில் கிடந்தது. தஞ்சை ஜில்லாவில் மொத்தம் 349-பேர் மாண்டனர். 26,053 கால் நடைகள் சேதமடைந்தன 35,230-வீடுகள் சேதமாயின, 1,62,412-வீடுகள் நாசமாயின. 2532-ஏக்கரா வெற்றிலைக் கொடிக்கால் பாழாகியது. 12,692-ஏக்கரா வாழைத் தோட்டம் சின்னுபின்னமாகியது. அறுவடைக்குத் தயாாகவுள்ள நெல் வயல்கள் 36,000 ஏக்கரா வீணுயின. மொத்த சேதமதிப்பு ரூ. 4¾ கோடியிருக்கும். திருச்சி ஜில்லாவில் மொத்தம் ரூபாய் 70 லட்சம் மதிப்புள்ள வெற்றிலை கொடிக்கால், வாழை, தென்னை தேப்புகள் பாழாயின. அப்போது பிரஞ்சு ஆட்சியிலிருந்த காரைக்கால் பகுதியில் ரூ. 50 லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் வயல்கள், தோப்புகள், பாழாயின. சுமார் 52 பேர் மாண்டனர்"—என்பதாகப் புள்ளி விபரங்களோடு எழுதியிருக்கிறது.

இந்த வரலாற்றைப் படிக்கும் போது வேதனை நம்மைச் சூழுகிறது. இவ்வாறு 1681-ம் வருடம் முதல் 1955-ம் வருடம் வரை இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்டு வருகிற சீரழிவு இனியும் ஏற்படாமல் சீரழிவைத் தடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும். புயலைத் தடுத்து நிறுத்துவது என்பது இயலாத ஒன்ருக இருக்கலாம். **ஆனுல் பாதுகாப்புள்ள வீடுகள் அமைத்துத் தரலாம்.** புயலோடு மட்டுமல்லாமல் கடல் கொந்தளிப்பால் வெள்ளம் புகுந்தும்ஊரைக்கொள்ளை கொள்ளும் கொடுமையைத் தடுக்கவேண்டும்.

சீன நாட்டிலே 1400 மைல் நீளப் பெருஞ்சுவர் எழுப்பினரே —அதுபோலவே தகுந்த நிபுணர்களைக்கொண்டு வந்து அழிவு அடிக்கடி ஏற்படும் கடலோரப் பகுதிகளெல்லாம் சுவர் எழுப்பி கொந்தளிப்பால் வெள்ளம் புகாமல் பாதுகாக்கலாம். இதற்கு மத்திய அரசாங்கத்தையே காமராசர் வற்புறுத்த வேண்டும். அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தைத் தடுத்து மக்களுக்குப் பாதுகாப்பளிக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேம். ஏன்? தமிழ் நாட்டிலும் இப்படி ஒரு அழிவைத்தடுக்கும் திட்டத்திற்கு நிதி தரமாட்டார்கள்? சிங்காரத் தமிழ் நாட்டிலே சீனத்துச் சுவர் எழுப்பிவிட்டால் அப்பகுதி மக்கள் அச்சமின்றி வாழவழிசெய்து கொடுத்த பெருமை காமராசரையே சேரட்டுமே! அதற்கு உருப்படியான செயலில் இறங்காமல் அடிக்கடி புயல் கொடுமையால் பாதிக்கப்பட்டும் மக்களுக்கு கீத்துக் கொட்டகையும் கால் நடைகளுக்கும், ஆக, 10-ஆண்டு கடன் என்ற பேரால் பொருளுதவி புரிவதோ அல்லது அவர்களைப்பற்றி வருந்துவதோ அவர்களுக்கு நிரந்தரமான வாழ்வை அளிக்காது. வேண்டுமானுல் நிவாரணப் பணியை அரசியலார் அக்கறையுடன் கவனித்தனர் என்ற விளம்பரம்தான் கிடைக்கும். எனவே முதலமைச்சர் காமராசர் அவர்கள் தமது ஆட்சி காலத்தில் நாம் எடுத்துக் காட்டியுள்ள வேண்டுகோளையும் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

●

"கிட்டி தாளம் ஜதி பாட்டைக் கேட்டதும்
[தகர் தீம்—தகர் தீம்...
லால லில லாலலே லீலு லாலலே
லல்லல்லாலா லில்லல்லேலில்லால் லாலா
[லுல்லல்லே
அதுவே எதிரில் வருவதற்குள்ளே அடடா நடடா
[அண்ணுத்தே...
அப்போ சிங்கமே வந்தால் என்ன செய்வே
பேபெ பேபெ பேபெ பே—
பெப் பேப் பெப்பே பெப்பேப்
அட கொக்கொரோ கொக் கோ சேவற்கோழி
அட கிக்கிரி கீகீ நானே தோழி
நீயும் வாபோ லாபோ
அவனும் அம்போ அம்போ....."

தமிழ் படும் பாடு அல்ல இது. திருவாளர் ராமய்யாதாஸின் இசையமைப்பு. 'குணசுந்தரி'யின் வெற்றிக்கு வழி கோலிய இசை கீதங்களின் 'லட்சணம்' இது கலப்பட மொழி நடை—அவருக்கே உரித்தான விருத்த விகாசம்—இசை அறிவு, எல்லாம் இந்தப் பாடல்களில் தமிழ் நடத்துகின்றன.

சில வருடங்களுக்கு முன் வாஹினியார் 'குணசுந்தரி' தெலுங்கு படத்தை தயாரித்தனர். புதிய கதையும், நல்ல கலைச் செல்வமும் அதற்கு புகழைத்தந்தன. சமூகப் படங்களையும், 'ராஜாராணி' கதைகளையும் இடை இடையே தயாரிக்கும் 'விஜயா' அதிபர்கள் 'மிஸ்ஸியம்மா'விற்கு பிறகு இதனை தமிழில் எடுத்திருக்கிறார்கள்—'டப்பிங்' முறையிலல்ல—தனித் தமிழ் படமாகவே இந்த இரண்டாவது 'குணசுந்தரி' உருவாக்கப்பட்டிருக்கிறது. விஜயாவில் வளரும் ராமய்யாதாஸ், வசனம் பாடல்களை எழுதியிருக்கிறார். பாதாளபைரவி' கல்யாணம் பண்ணிப்பார்' 'சந்திரஹாரம்' 'மிஸ்ஸியம்மா' ஆகிய படங்கள் தெலுங்கிலும், தமிழிலும் தயாரிக்கப்பட்டன. அவைகளில் ராமையாதாஸின் 'கலப்படமொழி' நிழலிட்டதில் விந்தையில்லை—அவரை குறை சொல்வதற்குமில்லை. 'குணசுந்தரி'யின் கதையே வேறு. முழுக்க முழுக்க தமிழில் தயாரான படம். இருந்தும் 'தெரு பாஷை'யை வாரி வழங்கியிருக்கிறார், வசனமாக.

மற்ற படங்களில் எழுத்தாற்றலுக்கு கட்டுப்பாடுவேண்டும். 'மணிப்பிரவாளம்' அனுமதிக்கப்பட்டது. 'குணசுந்தரி'யில் தமிழ் நொண்டியடிப்பது ஏனோ தெரியவில்லை. தெலுங்கை அப்படியே தமிழில் எதிரொலிக்கச் செய்வதில், திருவாளர் ராமய்யாதாஸ் கெட்டிக்காரர்தான்—மறுப்பதற்கில்லை. ஆனால் வாய்ப்பும் வசதியுமிருந்தும் பழைய புத்தியால் மொழியில் மண்ணை வாரி வீசியிருக்கிறார். என்ன செய்வது? திரையில் அறிவுலக கருத்துக்கள் ஒலித்தால் அபயக்குரலெழுப்பும் இந்த 'சென்ஸார்' சித்திரகுப்தர்கள் தமிழின் அலங்கோலத்தை எப்படி சகித்துக் கொண்டார்களோ தெரியவில்லை. ராமய்யாதாஸின் எழுத்தில் ஆபாசம் இல்லை ஆனால் அதனிலும் கொடிய 'சித்திர வதை' இருக்கிறது. மொழியை சின்னா பின்னமாக்கி கூத்தடித்திருக்கிறார். படம் முழுவதிலும் "வாடா, போடா, அடி, என்னடி." போன்ற அபஸ்வர வார்த்தைகள் மலிந்திருக்கின்றன.

நாகிரெட்டிக்கும், சக்ரபாணிக்கும் ஒரு வார்த்தை: கலையுலகிற்கு எத்தனையோ காணிக்கைகளை வழங்கி வரும் விஜயாவின் முத்திரைக்கு ராமய்யாதாஸ் நெருப்பிடுகிறார் கவனிக்க வேண்டும், அவர்கள். தோழரின் மூன்றுந்தர மொழிநடை கலைவைத்திலே புழுதியை நிரப்புகிறது. 'சந்திர ஹாரம்' தந்த பாடத்தைக்கூட விஜயா இரட்டையர்கள் மறந்துவிட்டார்கள்! இந்த களங்கம் அழிக்கப்படாவிட்டால் தோல்வி முகாரி ஒன்றே ஒன்றுதான்.. கிரி கிரி......

இவ்வளவு போதும் இனி படத்தின் மற்ற பகுதிகளுக்கு வருவோம். தெலுங்கு குணசுந்தரி வந்தபோது, அந்த நேரத்தில் அதன் கதையை பாமரர்கள் ரசித்தார்கள்

கலை அரங்கம்

• விஜயாவின்

குணசுந்தரி

கதை	...	நாகேந்திரராவ்
வசனம், பாடல்கள்	...	ராமய்யாதாஸ்
இசை	...	கண்டசாலா
நடிகர்கள்	...	சாவித்திரி, ஜெமினி கணேசன் மாதவன், நம்பியார், கருணாநிதி
டைரக்ஷன்	...	கே. காமேஸ்வர ராவ்
தயாரிப்பு	...	நாகிரெட்டி, சக்ரபாணி

இடையே யிருந்த நீண்ட காலத்தில் 'க. க. க. தெய்வம்' 'குலேபகாவலி' போன்ற படங்களில் கதையின் சில நிகழ்ச்சிகள் நிறைந்திருந்தன. ஆகவே இந்த புதிய குணசுந்தரியில் உயிர் இல்லை பிணத்தைப் பார்ப்பது போன்ற உணர்ச்சியே இருக்கிறது. தெலுங்கு படம் பார்த்தவர்களுக்கோ இது வெறும் குப்பை...கலைஞர் பாலசந்தர் எப்போதோ எழுதியிருந்தார்: துக்கம் தொண்டையை அடைக்கும்போது சங்கிதமா வரும்? நமது கதாபாத்திரங்கள் இசை அழகோடு பாட ஆரம்பித்துவிடுகிறார்கள் என்றெல்லாம்.

குணசுந்தரியின் பக்திப் பாடல்களும், வேதனை விருத்தங்களும் சராசரி இயற்கைத் தன்மையையும் இழந்து திரை முழுதும் ஒலிக்கின்றன. இது பெரும் குறை. தெய்வா தினம் பாடும் இரண்டு பாடல்களும், கணேசன் வாயசைக்கும் 'கலையே உன் விழிகூட கவிபாடுதே!' என்ற பாடலும் பாராட்டுதற்குரியன. சொற்கள் கோர்வையாக, அழுத்தமாக விழுந்திருக்கின்றன. கண்டசாலாவின் இசையமைப்பு பரவாயில்லை. ஏதோ இருக்கிறது.

சாவித்திரி வழக்கம் போல நடித்திருக்கிறார். கணேசனுக்கு சந்தர்ப்பமில்லை. நடிப்பதற்கு என்ன இருக்கிறது? மாதவனை திரும்பியும் திரையுலகிற்கு அழைத்துவந்த பெருமை விஜயாவிற்கு உண்டு. ரங்காராவ், கருணாநிதி, நம்பியார், மூத்துலட்சுமி ஆகியோர் நன்றாகவே வந்து போகிறார்கள். குறவன் குறத்தி பேசும் முறை ஓரே அலங்கோலம்—சகிக்க முடியாத தொல்லை! ராமய்யாதாஸின் 'வசனவிகாசம்' அப்படியே மணக்கிறது!

அந்தக் காலத்து மன்னவர்களும், அரசகுமாரிகளும் இப்படித்தான் இரண்டுங்கெட்ட மொழியில் பேசியிருப்பார்களோ, என்னவோ?

காட்சியமைப்புகளில் இயற்கைப் பொலிவு ததும்புகிறது. கலாதர் நிச்சயமாக பெருமை கொள்ளலாம். காமேஸ்வரராவின் டைரக்ஷனில் புதுமை எதுவும் இல்லை. தெலுங்கு படத்தை அப்படியே எடுத்திருக்கிறார், திறமைசாலி!

சலித்துப்போன கதை—இனிமையான சில பாடல்கள்—அதனை குழி தோண்டிப் புதைக்கும் கலப்பட மொழிநடை — சிறப்பான காட்சியமைப்பு இத்தனையும் சேர்ந்த கதம்பத்திற்கு 'குணசுந்தரி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

விஜயாவிடம் நிறைய எதிர்பார்த்தவர்களுக்கு பெருத்த ஏமாற்றம். கதையே கோணல் எழிலும், மேன்மையும் எங்கிருந்து வரும்? ஆனால் ஒரே ஒரு புதுமை இதில் ராமைய்யதாஸும் நடிக்கிறார்: பேசுகிறார்!

—சேரன் தம்பி

★

மார்கழி மூட்டம்

நான் இதே ஒரு பனிக் காலத்தில் பம்பாய் சென்றிருந்தேன். விக்டோரியா டெர்மினஸ்ஸில் ரயில் நின்றது. ரயில் எழுத்துப் பலகையைப் பார்த்து, விக்டோரியா டெர்மினஸ்தான் என்று ருசு படுத்திக் கொண்டேன், தலைக்கு மேலிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். மணி காலை ஐந்தரையா யிருந்தது.

நிலையத்தை விட்டு வெளியே சென்றேன். வியந்து நின்று விட்டேன். வியப்பிற்குக் காரணம், எப்பக்கம் நோக்கினும் வானத்தையே தூண்பதோர் காட்சி. கட்டடமோ, சாலையோ, தெருவோ எதுவுமே புலப்படவே இல்லை. அந்த அளவிற்கு பனி மாசு. மூட்டம் போட்டு, மூடிக்கொண்டது. பம்பாயே மூடுண்டு மறைந்தது. அண்ணுந்து எவரெஸ்ட்'டைப்பார்ப்பதை போலிருந்தது.

இரண்டு மணிக்குமேலாகவே நிலையத்து வெளிவாயிற்படியில் உட்கார்ந்து கொண்டேன். மணி எட்டு அடித்தது. வெயிலின் தோற்றம் அப்போதுதான் இலேசாகக் காணப்பட்டது. அதன் பிறகு ஆதவனைக் கண்ட பனி மறைந்தொழியு மல்லவா? மறைந்தது! பம்பாயைக் கண்டேன்! அலைந்தேன்! திரிந்தேன்! ஏழு நாட்கள் தங்கித் தாயகம் திரும்பினேன். அது அப்படியே இருக்கட்டும்.

இம்மாதம் 16-ம்நாள் பங்களூரே பனி மூட்டத்தால் துப்புர மூடப்பட்டு மறைந்ததாம். 100 கஜ தூரத்திற்கு அப்பால் ஒன்றுமே தெரியவில்லையாம். காலையில் விளக்குகளைப்போட்டுக் கொண்டே மெதுவாகவும், எச்சரிக்கையாகவும்தான் கார்களும், பஸ்களும் ஓடினவாம். வான ஊர்திகள் பிரயாணங்கள் தடைப்பட்டனவாம் காலை எட்டரை மணிக்கு மேல்தான் வான ஊர்திகளால் வானில் பறக்க வழி ஏற்பட்டதாம். என்னே இயற்கையின் சக்தி!

இயற்கையின் விநோதங்களே விநோதங்கள்! பனிப்புகை மண்டிலங்கள் ஊரையே விழுங்கி மறைத்து விடுவதும்; கடும் புயல் வீசி எண்ணற்ற உயிர்ச்சேதங்களையும் பொருட் சேதங்களையும் விளை விப்பதும்; மஞ்சள் மழை பெய்வதும்: கடும் வெயிலால் மக்கள் மாள்வதும்; நடுங்கும் இடியால் உயிர் போவதும்; எல்லாம் விநோதம் தான். இதற் டையில் நாம்—மனித சமுதாய மேதைகள்—இயற்கையின் விளைவால் ஏற்படும் கொடுமைகளை அகற்ற முயற்சிப்பதும், அவைகளில் சிலவற்றில் வெற்றிகண்டு, மற்றுஞ் சிலவற்றில் தோல்வி கண்டு நாம் வாழ்வதும் ஒரு விநோதமே!

"திரு"

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

திராவிடன் பொங்கல் மலர் வேண்டுகிற சந்தாதாரர்கள் தனியாக ஒரு ரூபாய் அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். அல்லது தங்கள் உளளூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம். தனியாக ஒரு ரூபாய் அனுப்பாத சந்தாதாரர்களுக்கு மலர் அனுப்பப் படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி.

திராவிடன்

சென்னை : 23—12—55 : வெள்ளி

வல்லரசுகளின் பலப் பரீட்சை?

உலக சமாதானத்தைப்பற்றி எல்லா நாடுகளும் ஓயாமல் பேசி வருகின்றன. பேசி வருவது மட்டுமல்ல, அந்த சமாதானத்திற்காகப் "போராடி" வருவதாகவும் சில நாடுகள் உரத்த குரலெழுப்புகின்றன. உலக வல்லரசுகளில், இரு பிரிவுகளின் தலைமைகளாய் இயங்கி வருவதும், ஒன்றுக்கொன்று வேறுபாடுகளைக் கொண்டதுமான அமெரிக்க—ருஷ்ய நாட்டுத் தலைவர்கள் கூட, உலக சமாதானத்திற்காகவே அணுக்குண்டுகள் — ஹைட்ரசன் குண்டுகளைத் தயார் செய்து வருவதாகவும், அதன் மூலமே உலக அமைதியை நிலை நிறுத்தப் போவதாகவும் தத்துவார்த்தம் பேசி வருகின்றனர். இவையனைத்துக்கும் மேலாக ஐக்கிய நாட்டுச் சபையில் உலக சமாதானப் பல்லவி, தக்க பக்க மேளத்துடன் கடந்த பல ஆண்டுகளாக பாடப்பட்டு வருகிறது.

இவ்வளவு பிரமாதமான ஆர்ப்பாட்டங்களுக்கிடையே பேசப்பட்டுவரும் அந்த உலக சமாதானம், ஓரளவாவது நிலைபெற ஆவன செய்யப்பட்டதா யென்றால், அதற்குப் பதிலாக ஏற்கனவே யிருந்து வந்த அமைதியையும் சீர்குலையச் செய்யும் பிற்போக்குத் தனம்தான் திரை மறைவில் மிக பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு வருகிறது. ஆனால் வெளியுலகத்தில் மட்டும் திரை மறைவு சூழ்ச்சியில் முக்கிய பங்கெடுத்திருக்கும் நாடுகளும் கூட சமாதானக் கூப்பாடு போட்டு வருகின்றன. இவையனைத்தையும் விட வேடிக்கை என்னவென்றால் "உலக சமாதானம்" என்பது ஐ. நா. சபையின் மிகப் பிரசித்திப் பெற்ற நாடகமாகவும், இதைப்பற்றி ஏதாவது பேசுபவர்களெல்லாம் உலக மேதைகளில் ஒருவராகவும் கருதப்பட்டு வருவதேயாகும்.

ருஷ்யாவும் உலக சமாதானமே தனது உயிர் என்று பறை சாற்றுகிறது. அதுபோலவே அமெரிக்காவும் உலக சமாதானம் தான் தனது மூச்சு என சாதித்து வருகிறது. ஆனால் இந்த இரு பெரும் வல்லரசுகள்—இவைகளைத் தலைமையாகக் கொண்ட இரு அணிவகுப்பிலுள்ள நாடுகளின் நடவடிக்கைகள், உலக சமாதானத்திற்கான செயல்களில் மனப்பூர்வமாக இறங்கியிருக்கிறதா யென்பதை நடுநிலையிலிருந்து ஆராய்வோமானால், உலக சமாதானத்தைவிட, இந்த இருநாடுகளும் தங்களின் பலத்தை உலகனைத்தும் விரிவடையச் செய்ய குறுக்குவழி என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே 'உலக சமாதானம்' என்ற பேரால் பலப்பரீட்சை நடத்தி வருகின்றன என்பதை அரசியல் யூகம் படைத்த அனைவரும் ஒப்புக் கொள்வர்.

நாம் இவ்விதம் கூறுவது சிலருக்கு உடம்பெரிச்சலா யிருக்கலாம். அதற்காக உள்ளதைச் சொல்லாமல் இருக்க முடியுமா?

ஏகாதிபத்திய பித்தம் உச்சிக்கேறி யிருக்கும் அமெரிக்கா—அணுகுண்டுகளைத் தயாரித்து அதன் மூலம் உலக நாடுகளை அச்சுறுத்துவதும், அதே சமயத்தில் இவ்வித நடவடிக்கைகள் உலக மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்றதல்லவே என்று பிறர் இடித்துக் கூறினால், அந்த நல்வாழ்வுக்காகவே அணுகுண்டுகளை அடுக்கி வைக்கிறோம். என்று அமெரிக்கா வியாக்யானம் செய்து வருவதை நாம் கண்டும்—கேட்டும் வருகிறோம்.

அதுபோலவே ருஷ்யாவும்—அணுகுண்டுகளுக்கு அப்பன்குண்டுகளைத் தயாரிப்பதில் தீவிரமாக தனது சக்தியைச் செலவிடுவதுமட்டுமின்றி, சமாதான செய்தியைக் கரத்திலேந்தி அண்மையில் இந்தியத் துணைக்கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்து வந்த தலைவர்கள்-ருஷ்யாவின் ஒரு பகுதியில் அதை வெடிக்கச் செய்து, அதற்கான தமது விமர்சனத்தையும் இந்தியாவிலிருந்தே விவரித்துச்சென்றனர்! உலக அமைதியைத் தேடவே இக்குண்டுகளைத் துணையாய்க் கொண்டிருப்பதாகத்தான் ருஷ்யத் தலைவர்களும் தங்கள் விமர்சனத்தில் குறிப்பிட்டனர்.

ருஷ்ய—அமெரிக்க கோஷ்டிகளின் நடவடிக்கைகள், வெளியுலகத்தில்தான் இந்தக் கோமாளித்தனமாயிருக்கிற தென்றால், ஐக்கிய நாட்டுச் சபையில் அதையும் மிஞ்சுமளவுக்கு போட்டி போடுகின்றன.

ஐ. நா. சபையில் மக்கள் சீனத்துக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற பிரச்னை கடந்த பல ஆண்டுகளாக தீவிரமாகப் பேசப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். ஆனாலும் உலக மக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு கொண்ட சீனத்துக்கு இன்றுவரை ஐ. நா. சபையில் இடம் அளிக்கவில்லை. இடம் அளிக்க முடியாதவாறு ஐ. நா. சபையின் விதிமுறைகளே வழிமறைத்து நிற்கின்றன.

அதாவது—ஐ. நா. சபையில் முக்கிய அங்கமான பந்தோபஸ்து குழு (Security Council) வில், ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் சியங்கேஷேக் சைனு ஆகிய வல்லரசுகள் அங்கம் வகித்து வருகின்றன. இந்தியா—பாக்கிஸ்தான் போன்ற மற்ற நாடுகளுக்கும் வரிசைக் கிரமமாக (விட்டு விட்டு) அந்தக் குழுவில் இடம் கிடைக்கும். அக்குழுவின் ஏகோபித்த அனுமதி பெற்றால்தான் ஐ. நா. சபையில் எந்த நாடுகளும் உறுப்பினராக முடியும். ஏதாவது ஒரு நாடு, தனக்குள்ள விசேஷ ஓட்டுரிமையை (Veto Power) பிரயோகித்தால் மற்ற ஐந்து நாடுகளும் ஒரு மனதாகக் கொண்ட முடிவுகூட செல்லுபடியாகாது என்பதுதான் அந்த தர்மகர்த்தா சபையில் அங்கம்வகிக்கும் நாடுகளுக்குள்ள விசேஷ ஓட்டுரிமை!

இந்த விசேஷ அதிகாரத்தைக் கொண்டுதான், மக்கள் சீனம் ஐ. நா. சபையில் நுழையாதபடி சியாங்-கே-ஷேக் கோஷ்டி முட்டுக்கட்டையிட்டு வருகிறது. இதற்கு அவர்கள் தரும் தத்துவார்த்தம் என்னவெனில், "மக்கள் சீனம் கம்யூனிஸ்டு நாடுகளின் கைப்பாவையாகயிருந்து வருகிறது" என்பதேயாகும். அதுபோலவே ஜப்பானுக்கு ஐ. நா. சபையில் இடமளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ருஷ்யா தனது விசேஷ ஓட்டுரிமையால் தடுத்து நிறுத்துகிறது. "அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவலாளர்களில் ஜப்பானும் ஒன்று" என்பதே ருஷ்யாகூறும் விளக்கமாகும்.

எனவே, இவ்வாறு அமெரிக்க—ருஷ்ய கோஷ்டிச் சண்டைகளுக்காக, மக்கள் சீனத்துக்கு பெரும் துரோகம் விளைவிக்கப்பட்டு வருவதைத் தடுக்க ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் எந்த நாடுகளும் தீவிர நடவடிக்கை எடுக்காமல். அதற்கு பதிலாக அந்த இரு வல்லரசுகளின் பலப்பரீட்சைக்குத் தெரிந்தோ தெரியாமலோ தூபம் போட்டு வருகின்றன.

கம்யூனிஸ்ட் கொள்கையோ அல்லது அதற்கு மாறான கொள்கையோ, குறிப்பிட்ட ஒரு நாட்டுமக்கள் ஒரு மனதாக ஒரு கொள்கையை ஆதரிக்கிறார்களென்றால் அந்தக் கொள்கைக் கேற்ப ஆட்சி பீடத்திலிருக்கும் சர்க்காருக்குத் தரப்பட வேண்டிய உரிமையை மரியாதையாக அளிக்க முன்வருவதுதான் நேர்மைப் புத்தி யுடையோரின் செயலாகும். ஆனால் ஐ நா. சபையில், கடந்த பல ஆண்டுகளாக இந்த அநீதி தொத்துநோய் போல பரவி வருகிறது.

சென்ற வாரம் ஐ நா. சபையில்—இலங்கை, நேப்பாளம் போன்ற நாடுகள் உள்ளிட்ட 16 நாடுகளுக்கு உறுப்பினராகச் சேரும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது ஆனால் மக்கள் சீனத்துக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. ஐ.நா.சபையின் தர்மகர்த்தா குழுவில் சியாங்-கே-ஷேக் சர்க்கார் பிரதிநிதி தனது விசேஷ ஓட்டுரிமையைப் பிரயோகித்து—அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்திருக்கிறார்.

இந்த அநீதி மக்கள் சீனத்துக்கு இழைத்த துரோகம் மட்டுமென்று அமெரிக்க கோஷ்டி எண்ணுமானால், அதைவிட மட்டரகமான முடிவு வேறு யிருக்க முடியாது. இவ்வித ஆதிக்கப்போக்கினால் ஐ. நா. சபைக்கும், ஏன் மனிதாபிமானத்துக்கே பெருந்துரோகம் செய்யப்பட்டுவரும் குற்றச் சாட்டுக்குத்தான் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஆளாக நேரிட்டிருக்கிறது.

அதுபோலவே, ஜப்பானுக்கு ஐ நா. சபையில் உறுப்பினர்பதவி அளிக்கும் தீர்மானம், ருஷ்ய நாட்டின் விசேஷ ஓட்டுரிமையால் தடுக்கப்பட்டிருப்பதையும் நாம் இங்கே குறிப்பிட வேண்டி யிருக்கிறது. இந்நிலையில் உலக சமாதானத்தைப்பற்றி தொண்டை கிழியப் பேசுவதில் அமெரிக்க—ருஷ்ய நாடுகள் சளைப்பதில்லை.

ருஷ்ய—அமெரிக்க நாடுகளின் பலப் பரீட்சையின் ஒத்திகை மண்டபமாக ஐ. நா. சபை இயங்குவதென்றால், அதைவிட அந்த அமைப்பையே கலைத்து விட்டு, இரு கோஷ்டிகளும் தமது கைவரிசையை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்வது எவ்வளவோ கண்ணியமுள்ள செயலாக மதிக்க முடியும்,

ஐ. நா. சபையை தமது பலப்பரீட்சைக்காகவே பயன் படுத்தி வரும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், நடுநிலை நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் இந்தியா போன்ற நாடுகள், ஒன்று ஐ. நா. சபையைவிட்டு வெளியேறி விடுவோம் என்று திட்டவட்டமாக அறிவித்துவிடவேண்டும் அல்லது வல்லரசுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷ ஓட்டுரிமையை ரத்து செய்யும் வகையில் ஐ. நா. விதி முறைகளை மாற்றி அமைக்க உடனே முயல வேண்டும் என்பதே நமது வேண்டுதலான எடுத்துக்காட்டாகும்.

இத்தகு ஆக்கப்பணியில் முனையாது—ஏதோ ஐக்கிய நாடுகளில் இந்தியாவுக்கு கீர்த்தி—கித்தாப்பு என்றெல்லாம் பீத்திக் கொள்வதானது "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூ அதற்கு உள்ளே யிருக்குதாம் ஈறும் பேனும்" என்ற கதையாகத்தான் ஐ. நா. சபையின் நடவடிக்கைகள் மதிக்கப்படும் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறோம்.

நிற்க, ஏகாதிபத்ய வெறி பிடித்த கோஷ்டிகளின் சேஷ்டை

செய்திகள்

பம்பாய்

பம்பாய் தி மு. கழகம்— தாராவி கிளையின் செயற்குழு கூட்டம் 8-12-55 வியாழக்கிழமை இரவு 7-30 மணியளவில் 'திராவிடரக'த்தில் தோழர் டி. வி. துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடந்த கூட்ட நிகழ்ச்சிகளும், கடிதப் போக்கு வரத்துக்களும் படித்துக் காண்பிக்கப்பட்டு, குழு உறுப்பினர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டது.

கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பம்பாய் வருகையின் போது, தாராவி கிளையின் சார்பாகப் பொதுக் கூட்டம் தாராவி வ, உ சி திடலில் நடத்துவதெனவும் பொதுக் கூட்டத்திற்குத் தலைவராக செயலாளர் தோழர் சி.த.மு இரா. ஆரிய சங்காரன் அவர்களும், பேச்சாளர்களாகத் தோழர்கள் எம். எஸ். கணபதி, த மு. பொற்கோ ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டு முடிவுகள் செய்யப்பட்டன. பம்பாயில் தி மு க. பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்.

கழகத்தின் சார்பாக விரைவில் ஒரு நாடகம் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டு, நாடகப் பொறுப்பாளர்களாகத் தோழர்கள் பி. எஸ். செல்லையா, மா. இரா எ இரெத்தினசாமி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியரும் திராவிட இன நலத்தில் நாட்ட மிக்கவரும் ஆன திரு இருசயராஜ அவர்களின் திடீர் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துவதுடன், அவரது பிரிவால் துயருறும் அவர்தம் துணைவியர்க்கும், உறவினர்க்கும், மாணவர்கட்கும் இக்குழு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

காந்தவல்லி தி. மு. க. முன்னுள் செயலாளர் தோழர் தி. சே அருணசலம் அவர்களின் செல்வன் சேரன் இயற்கை யெய்தியமைக்கு வருந்தி இக்குழு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

அண்மையில் வெளியான மாநில சீரமைப்புக் குழுவின் அறிக்கை குறித்து, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் அறிக்கைக் கிணங்க ஆவன செய்யுமாறு மத்திய அரசியலாரை இக்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்வதுடன், தேவிகுளம்—பீர்மேடு— செய்யாற்றின் கரை—சித்தூர் ஆகிய பகுதிகளை முறையாகத் தமிழ் மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்றும், 'சென்னை மாநிலம்' என்ற பெயரை 'தமிழகம்' அல்லது 'தமிழ்நாடு' என்றழைக்கப்பட வேண்மென்றும் இக்குழு அரசியலாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

பம்பாயைத் தலை நகராகக் கொண்ட மராட்டிய மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற நேர்மையான கோரிக்கையை இக்குழு வரவேற்பதுடன் அதற்கான செய்யவேண்டுமென மத்திய அரசியலாரை இக்குழு கேட்டுக் கொள்கிறது. இறுதியில் தோழர் தங்கவேலன் நன்றி நவிலக் கூட்டம் இனிது கலைந்தது.

*

மாதுங்கா தி. மு. கழகம்

13-12-55ம் நாள் மாலை 6–மணிக்கு B B. மாதுங்கா இலாவியா கட்டிடத்தில் தோழர் சபாபதி அவர்கள் இல்லத்தில் ஜே. எஸ் இலாசரஸ் அவர்கள் தலைமையில், அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

தொ. து. அன்புச்செழியன் சென்ற கூட்ட நிகழ்ச்சியையும் கடித போக்கு வரத்தையும் படிக்க ஒப்புக் கொள்ளப் பட்டன.

தோழர் கே. இதயன் அவர்கள் புதிய செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர்களான இ எஸ் எஸ். பிச்சையா, ஜோதி நாயகம், யோ. தர்மராசன், தொ. து அன்புச்செழியன், இலாசரஸ், எஸ் எஸ். பாண்டியன், நாராயணன், என். பெருமாள் ஆகியோர் தென்னாட்டின் புயல் கொடுமைகளைப் பற்றி பேசினார்கள்.

தோழர் என். பெருமாள் அவர்கள் தலைமையில்—புயல் நிவாரண நிதிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது

தாயகம் செல்லும் தோழர் யோ, தர்மராசனின் பணியைப்பற்றிப் பலர் பாராட்டி பேசினார்கள் கழகத்தின் சார்பாக அவருக்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.

புயலாலும் பெரும் மழையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத் தீர்மானத்துடன் தலைவர் முடிவுரைகூற அன்புச்செழியன் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது

*

ஆதி திராவிட நலஉரிமை சங்கம்

நெல்லை மாவட்டம், இராமானுஜம் புதூர் ஆதி திராவிட நலவுரிமைச் சங்கம், பம்பாய் கிளையின் 5–வது ஆண்டு 9-வது கூட்டம் 11—12—55 இரவு 8–மணிக்கு பம்பாய் தாராவி, க வ.வி. சங்க அறையில் திரு, சு. வானமாமலை அவர்கள் தலைமையில் நடந்தேறியது.

சங்கப் பொருளாளர் திரு.சி. ஆறுமுக நயினர் அவர்கள் தாயகம் செல்லுவதால், அவர் திரும்பும்வரை அவரது பொறுப்பினை தற்காலிகமாக தணிக்கையாளர் திரு. எம், நடராசன் அவர்கள் மேற்கொள்ளுவது எனவும், மருத்துவமனை நிறுவுவது குறித்து மேலதிகாரிகளை நேரில் கண்டு ஆவன செய்யும் பொறுப்பு அண்மையில் தாயகம்செல்லவிருக்கும் தோழர்களான சி. ஆறுமுக நயினர், ஆ. பாலச்சந்திரன், சு. வானமாமலை, ப. குமரவேல், வே சுப்பையா ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டது.

இறுதியாக தலைவர் முடிவுரையுடன் செயலாளர் ஆ. பாலச்சந்திரன் நன்றி நவில கூட்டம் இரவு 12–30 மணியளவில் இனிது கலைவுற்றது.

●

தென் பகுதி இரயில்வே மென் யூனியன். பொன்மலை

(பகுதி எண் 1647) அறிவிப்பு

★

தென்பகுதி இரயில்வே மென் யூனியனின் (S R. M U) பொதுச் செயலாளர் என்று சொல்லிக் கொண்டு A K சச்சிதானந்தம் என்ற ஒருவரின் பெயரில் தென் பகுதி இரயில்வே மென் யூனியன் பொதுச்சபை (General—Body) கூட்டம் 25—12—55 அன்று பொன்மலையில் கூடும் என ஒரு அறிக்கை ஒரு தின இதழில் வந்திருக்கிறது. தோழர் சச்சிதானந்தம் என்பவர், யூனியனிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்கப்பட்டவர் என்பதும். அவர் எந்த பொறுப்பும் வகிக்கவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. எனவே பொன்மலையில் கூடுவதாக அறிவிக்கப் பட்டுள்ள அந்த கூட்டம் யூனியனின் அதிகார பூர்வமானது அல்ல என்பதோடு அதன் நடவடிக்கைகள் யூனியனைக்கட்டுப்படுத்தாது என்று அறிவிக்கப்படுவதோடு அத்தகைய அறிக்கைகளை கண்டு ஏமாறாமல் இருக்கும்படி ரயில்வே தொழிலாளர்களையும், குறிப்பாக யூனியன் அங்கத்தினர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

சி இராகவானந்தம்
தலைவர்

பொன். பரமசிவம்
கூட்டுப் பொதுச் செயலாளர்.

எஸ். ஆர். எம். யூ., சென்னைக் கிளை

★

8—12—55 வியாழன் மாலை 6-30 மணிக்கு தென் இந்திய ரயில்வே மென் யூனியனின் சென்னை கிளையின் செயற்குழு சைதையில் கூடியபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

அண்மையில் தமிழ்நாட்டில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

புயலால் பாதிக்கப்பட்ட இரயில்வே தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கவேண்டும் என்று இரயில்வே நிர்வாகத்தை இக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

புயல் நிவாரண நிதிக்கு நமது கிளையின் சார்பாக ரூ 5/—அனுப்புவதென இக்குழு தீர்மானிக்கிறது. (9-12-55 அன்று முதலமைச்சர் பெயருக்கு ரூ. 5, அனுப்பப்பட்டது)

4—12—55-ல் விழுப்புரத்தில் மத்திய சங்கத் தலைவர் தோழர் S இராகவானந்தம் அவர்கள் தலைமையில் கூடிய மத்திய சங்க செயற்குழு முடிவுகளை இக்குழு முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளுகிறது.

விலக்கப்பட்ட கூட்டுப் பொதுச் செயலாளரிடமிருந்து யூனியன் சம்பந்தமான சொத்துக்கள் எல்லாவற்றையும், தற்போதைய கூட்டுப்பொதுச் செயலாளர் திரு. பரமசிவம் அவர்களிடம் சேர்ப்பிக்க சட்ட ரீதியான எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி மத்திய சங்கத் தலைவரை இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

பெரம்பூர்பகுதிக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டி கீழ்க்கண்டவர்களை செயற்குழு உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளுவது என இக்குழு தீர்மானிக்கிறது.

துணைச்செயலாளர் தோழர் முருகவேள், உறுப்பினர்கள் தோழர்கள் G. R துரைசாமி, L, நாராயணசாமி, G M இராசகோபால், T. J இராசரத்தினம், சுந்தரமூர்த்தி.

வ. ஆ. மாவட்ட ஆட்சி மன்றத்திற்கு தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமியின் தீர்மானங்கள்

கீழ்க்கண்ட அவசர தீர்மானங்களை அடுத்து நடைபெறும். கூட்டத்தில் கொண்டுவர வ. ஆ மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் எ.எல்.சி கிருஷ்ணசாமி அதன் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்.

தஞ்சை திருச்சி மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களில் வீசிய கடும் புயலாலும் வெள்ளத்தாலும்உயிரிழந்த மக்களுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

புயல் நிவாரண வேலையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் துயரை ஓரளவுற்கு போக்க முயற்சி எடுத்துக் கொண்ட முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய் 10001 வ ஆ, மாவட்ட ஆட்சி மன்றத்தின் சார்பில் அரசாங்கம் சேகரிக்கும் நிதிக்குத் தருவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது

களுக்கு ஏட்டிக்குப் போட்டியான காரியங்களில் ஈடுபடுவதைவிட சிறிது விட்டுக் கொடுத்துப் பார்க்கலாம் என்ற பெரு நோக்கு கொண்டு ரஷ்யாவாகிலும் ஐ. நா, சபையின் விவகாரங்களில் கவலை செலுத்தினுல் அந்த ஏகாதிபத்ய நாடுகளின் போக்கினை உலகிற்கு தெளிவாக எடுத்துக் காட்டி அவைகளை மட்டந்தட்டவும் இயலும். அதைவிடுத்து அக்கோஷ்டிகளுடன் பலப்பரிட்சையில் இறங்கி உள்ளூர பகைமை உணர்ச்சியை இருதரப்பிலும் வளர்த்து வரச் செய்வதானது ருஷ்யாவின் போக்கில் ஐயுற வேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன் உலக சமாதானத்திற்குப் பதிலாக, உலகப் பகை உணர்ச்சி "கருவிலுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து" என்ற கதையாகத்தான் முடியும் என்பதையும் மிகப்பணிவாக அறிவுறுத்துகிறோம்.

எனவே அடுத்த ஆண்டுக்குள்ளாகிலும் மக்கள் சீனம், ஐ. நா. சபையில் இடம் பெறவும், அது போலவே உலக நாடுகள் அனைத்தும், தங்களுக்குள் மூடி மறைத்து வைத்திருக்கும் குரோதத்தை விட்டொழித்து—உண்மையிலேயே உலக சமாதானத்துக்கான பாதையில் காலடி எடுத்து வைக்கும் தோழமையைப் பெற வேண்டுகிறோம்.

அதுபோலவே இலங்கை—நேப்பாளம் போன்ற நாடுகள் எந்த அடிப்படையின் மீது ஐ. நா. சபையில் இடம் பெற்றுள்ளதோ அக்காரணங்களைவிட எல்லா வகையிலும் உயரியதான நாடுகள், இன்று உரிமைபற்று வாழும் அநீதியை ஒழித்து அந்நாடுகளுக்கும், இன—கலாச்சார அடிப்படையில் (ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் உரிமை அளிக்க முடியா விட்டாலும்,) சுதந்திரமாக இயங்குவதற்காவது வழிவகை தேடவேண்டும் என்பதையும் இப்போதே கவனப்படுத்தி வைக்கிறோம். அந்த எழில்மிக்க நாடுகளில் ஒன்று தான் எமது இன்பத் திராவிடம்.

வட்ட மேசை

கெயிட்ஸ்கல் பேசுகிறார்!

பிரிட்டிஷ் முன்னாள் முதலமைச்சரும் தொழிற் கட்சித் தலைவருமான அட்லி அவர்கள் தமது தலைமைப் பதவியைத் துறந்து ஓய்வு பெற்றிருக்கிறார். அவரை பிரிட்டிஷ் ராணியும் பெருமைப்படுத்தியிருக்கிறார். இந்தியா தனிஉரிமை பெற வேண்டுமென்பதில், தொழிற் கட்சித் தலைவர் அட்லியும், தொழிற்கட்சி அரசாங்கமும் காட்டிய அக்கறையை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அனைவரும் ஒருமனதாகப் பாராட்டுவர் என்பதில் ஐயமில்லை. எனவே அட்லிக்கு நமது பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அட்லிக்கு பதிலாக் கெயிட்ஸ்கல் என்பவர் தொழிற்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அவர் தமது கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் ருஷ்ய—இந்திய உறவு குறித்து தமது கருத்தைக் கீழ்க்கண்டவாறு வெளியிட்டிருக்கிறார்.

"இந்தியா—பர்மா முதலிய நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்தது யார்! பிரிட்டனில் தொழிலாளர் கட்சியின் அரசாங்கம் நடைபெற்ற போதுதான் அந்த தேசங்களுக்கு உரிமை கொடுத்தது!

சோவியத் ரஷ்யத் தலைவர்கள் இந்தியாவைத் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்கள், ஆனால் சோவியத் ரஷ்யா பிடித்து வைத்திருக்கிற நாடுகள் ஒன்றுக்காவது இன்றுவரை சுதந்திரம் கொடுக்க வில்லை!"

என்று குறிப்பிட்டிருக்கிறார், பிரிட்டனின் எதிர்கால முதலமைச்சராய் வரக் கூடும் என்று கருதப்படுகிற கெயிட்ஸ்கல் பேச்சு, பிரிட்டன் அரசியல் வட்டாரங்களில் மிகவும் மதிக்கப்படுகிறதாம்!

இந்தியாவைத் தங்கள் தங்கள் பக்கம் இழுக்க—ருஷ்யா—அமெரிக்கா—பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பேசும் பேச்சு, ஆடு நனைகிறதேயென்று ஓநாய்கள் அழுத கதைபோல யிருக்கிறதென்று நமது நண்பர் ஒருவர் கூறுகிறார்! ஆனால் இதை அருகிலிருந்து கேட்ட பரந்த கண்ணோட்டக்காரரா ஒருவர், இது மிகவும் குறுகிய மனப்பான்மை—ரஷ்யாவுக்கு அந்த எண்ணமே இல்லை என குதித்தெழுந்து மேஜையைத் தட்டிப் பேச, அதனால் அவருக்குக் கையில் பெருங்காயம் ஏற்பட்டு, மாஸ்கோ மருத்துவ விடுதிக்குச் செல்ல திட்ட மிட்டிருக்கிறார்!

அடிமேல் அடி அடித்தால்?

பெயருக்குப் பின்னால் ஜாதிகளைக் குறிப்பிடுவது, காட்டுமிராண்டித்தனமாகும்—மனிதாபிமானத்தையே சீர்குலைத்துவிடும் என்று 1929-ம் ஆண்டில் செங்கற்பட்டில் நடைபெற்ற மாநில சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்ட பொழுது — சங்கராச்சாரிகளிலிருந்து புரோகிதப் பார்ப்பனர்வரை ஆத்திகம் அழிந்தது, சாஸ்திரம் சரிந்தது—தர்மம் தலை சாய்ந்தது, என்றெல்லாம் ஓலமிட்டார்கள். சுயமரியாதை இயக்கத்தை தடைப்படுத்த, தேசியப் பார்ப்பனரிலிருந்து சாதாரண பார்ப்பனர் வரை சர்க்காரிடம் சாடி சொன்னார்கள். ஆண்டவனிடம் அழு குரலுடன் முறையிட்டனர். இந்த உயரிய கொள்கைக்காக பணியாற்றிய உத்தமர்களின் சிலரது உயிரையும் ஆரியம் குடித்தது.

எனினும் சுயமரியாதை இயக்கம் தனது பணியினைத் தொடர்ந்து செய்து வந்தமையால் 1929-ம் ஆண்டு எந்த எத்தர்கள் எதிர்த்தார்களோ அந்த கொள்கை இன்று டெல்லிப் பாராளுமன்றத்தில் சட்டமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

"பத்திரங்கள்—மற்ற விண்ணப்பங்கள் ஆகியவைகளில் இனி ஜாதியின் பெயரை எவரும் குறிப்பிடக் கூடாது" என்ற சட்டம் சென்ற வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேறியிருக்கிறது.

இப்போது அந்த வைதிக புரியினரின் ஓலம் என்ன செய்யும்! அடிமேல் அடி அடித்தால் அம்மியே நகரும் போது — வெறும் தர்ப்பைப் புல்லையே ஆயுதமாகக் கொண்டு ஏமாற்றி வந்த ஆரியம் நகருவது மட்டுமல்ல குனிந்து கொடுக்கும் என்பதைத்தான் சுயமரியாதை இயக்கத்தின் பணி—திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டு எடுத்துக்காட்டியிருக்கிறது.

முட்டியபின் குனிந்து கொடுத்த பக்தர்கள்!

நடிகவேள் எம். ஆர் ராதா அவர்கள் தமது நாடகக் குழுவினருடன் சென்ற ஆண்டு இறுதியில் மதுரையில் ராமாயண நாடகம் நடத்திய பொழுது அதனை எதிர்த்து பக்தர்கள் கோஷ்டி எனப்படுவோர் கலவரம் செய்ததும் அதனால் பொதுஜன அமைதிக்குத் தீங்கு விளைவித்த குற்றத்திற்காக அந்தப் பக்தர்கள் மீது சர்க்கார் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்த விவரத்தையும் நேயர்கள் அறிவர். அவ்வழக்கு இறுதிக்கட்டத்தை அடையும் இன்று—கலவரம் செய்த அந்த பக்த சிகாமணிகள் 37-பேர் தங்களின் போக்கிற்காக வருந்தி மன்னிப்பு எழுதிக் கொடுத்ததால்! சர்க்கார் தங்களின் வழக்கை வலியுறுத்தாது விடுத்தனர். பக்தர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்த மனவளம் துவக்கத்திலேயே இருந்திருக்குமானால் முட்டிய பின் குனிந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா!

எவ்வகையிலோ — இராம பக்தர்களுக்கு ஏற்பட்ட இந்த மனவளம் எதிர்காலத்திலாகிலும் நிலை பெற்றிருக்க அந்த ராமன் பாதுகாத்து வர வேண்டும் என்பதே நமது ஆசையாகும்.

பந்த்ஜீயின் பரவசம்!

இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சர் பண்டிட் பந்தஜீ—இந்தியப் பாராளுமன்ற மேல் சபையில், மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கை பற்றி விமர்சனப்படுத்துகையில் இந்த அறிக்கையை இந்தியாவிலுள்ள அனைவரும மனமார வரவேற்கிறார்களென்று செப்பினாராம்! இதைக் கேட்டு ராஜ்ய சபை உறுப்பினர்களில் சிலர் வாயை மூடிக் கொண்டு சிரித்தனராம்!

மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையை எதிர்த்து நாடெங்கும், அதுவும் பந்தஜீக்கள் எந்த பாரத மாதாவுக்குப் பிறந்ததாகக் கூறப்படுகிறதோ அதே பாரத மாதவுக்குப் பிறந்த தேசிய முகாமினராலேயே தட்டிக் கேட்டும் வகையில் கீழ்த்தரமான கலவரங்கள் நடைபெற்றிருக்க—ஒரே அடியாக அதை மறைத்து விட்டு அனைவரும் வரவேற்கின்றனர் என்று ராஜ்ய சபையில் பந்த்ஜீ கூறி பல்லையிளிக்கிறாரென்றால், அரசியல் தெளிவு பெற்ற சிலராவது பந்த்ஜீக்களின் சேஷ்டைகளைக் கண்டு சிரிக்கத்தானே செய்வர்.

ஒருக்கால், நேருஜி, பந்த்ஜீ ஆகியோரின் சொந்த மாநில மாகிய உத்திரப் பிரதேசத்தில் மாநில புது அமைப்புக் குழுவினர் கையை வைக்க வில்லையென்பதை எண்ணி மனம்பூரித்து பந்த்ஜீ பரவசப்பட்டிருப்பார் போலும்!

— வீரன்

நடக்க இருப்பவை

பெங்களூர்

தி. மு. கழக சார்பில் 25—12—55 ஞாயிறு மாலை 5-மணிக்கு பிளாக் பள்ளி (சிவாஜீ நகர்) தி. மு. கழக எதிரிலுள்ள திடலில் மாபெரும் கூட்டம் நடைபெறும் (தோழர் ஜி, எப். லூயிஸ் தலைமையில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், மற்றும்பலர் பேசுவர், அதுசமயம் துணைப்பொதுச் செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப் படும்,

காலை 9-மணிக்கு கழக ஊழியர்கள் கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் கலந்து கொள்வார்.

திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம்

25—12—55 ஞாயிறு காலை 9 30 மணிக்கு ஓட்டேரி ஸ்டாரன்ஸ் ரோடு 32-வது இல்லத்தில் தோழர், கதிர் சுப்ரமண்யம் தலைமையில் மேல் நாடும்—நம் நாடும் என்பது குறித்து சொற்பயிற்சி நடைபெறும்.

சோஷலிஸ்ட் கட்சி மாநாடு

டாக்டர் ராம்த் மனோகர் லோகியாவைத் தலைவராகக் கொண்ட சோஷலிஸ்ட் கட்சி மாநாடு டிசம்பர் 28-முதல் ஜனவரி 3-ம் நாள்வரை ஐதராபாத்தில் நடைபெறும் என்றும், அது சமயம் கட்சியின் அமைப்புக்கான திட்டங்கள் உருவாக்கப்படும் என்றும் செயலாளர் அறிவிக்கிறார்.

இயல்-இசை-நடனப் பெருவிழா

புயல் நிவாரண நிதிக்காக டிசம்பர் 24 25-ம் தேதிகளில் திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் மேற்படி பெருவிழா நடைபெறும். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், மதுரம், நடிப்பு இசைப் புலவர் கே. ஆர் ராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், தியாகராச பாகவதர், சகஸ்ரநாமம், டி. கே. எஸ். சகோதரர்கள், டி. எஸ். பாலையா எம். கே. ராதா, கணேசன், பானுமதி, சாவித்திரி, ராஜசுலோசனா ஆகியோரும், மற்றும் எல்லா முக்கிய நடிக—நடிகைகளும் பின்னணிப் பாடகர்களும் கலந்து கொள்வர்.

வ. ஆ. மாவட்ட மத்திய திருக்குறள் கழகம்

1—1—'56 ஞாயிறு பகல் 2-30 மணிக்கு ஆம்பூர் திருவள்ளுவர் கழக நிலையத்தில் (46, சுண்ணாம்புக்காரத் தெரு) வ. ஆ மாவட்ட மத்திய திருக்குறள் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வ. ஆ. மாவட்டத்திலுள்ள திருவள்ளுவர் கழகங்களின் பிரதிநிதிகளும், பல முக்கியஸ்தர்களும் கலந்து கொள்கிறார்கள். எங்களிடமிருந்து நேரிடையாக அழைப்பு அனுப்பப்படாத (வ ஆ. மாவட்டத்திலுள்ள) ஒவ்வொரு திருவள்ளுவர் கழக மும் தங்கள் கழகத்தின் சார்பாக ஒன்று முதல் மூன்று பிரதிநிதிகள்வரை மேற்படி கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ளலாம் பிரதிநிதிகளின் பெயரையும் தங்கள் கழக அமைப்பையும் திருவள்ளுவர் கழகம் ஆம்பூர் (வ. ஆ மா) என்ற முகவரிக்கு முன்னதாக தெரியப்படுத்தவும், என செயலாளர் சானகிராமன் அறிவிக்கிறார்.

கோவை நகர தி. மு. கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

நகரில் 1955—56-ம் ஆண்டுக்கு உறுப்பினர் சேர்க்கும் பாரங்கள் நகரில் உள்ள எல்லா வட்டாரக் கிளைகள், கழகத்தைச் சேர்ந்த படிப்பகங்கள் மன்றங்கள், நகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் நகரில் உள்ள முக்கிய தோழர்கள இவர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளது, ஆங்காங்குள்ள தோழர்கள் உடனடியாக உறுப்பினராக பதிவு செய்து கொள்ளவேண்டுவதுடன்,

நகர கழக அலுவலகத்தில் (தியாகராயர் படிப்பகம்) தினசரி மாலை 6-மணி முதல் 9-மணி வரையும் ஞாயிறன்று காலை 9-மணி முதல் 12-மணி வரையும் வந்து பதிவு செய்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது, என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறேன்,

சே, அ. ராசமாணிக்கம், செயலாளர்

நகர தி, மு. க. புயல் நிவாரண நிதிக்காக கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகம், பொது மக்களிடத்தில் நன்கொடையாக ரூபாய் 158—9—9ம் உண்டியல் மூலமாக ரூபாய் 121-7-0ம் வசூல் செய்து மொத்தரூபாய் 280-க்கு டிராப்ட் வாங்கி கோவை மாவட்ட கலெக்டரிடம் கொடுத்திருப்பதுடன் சுமார் ரூபாய் 600 மதிப்புள்ள துணிகளும் வசூலித்து கொடுத்துள்ளது,

கம்பம்

14—12—55-ம் தேதி இரவு கம்பம் காந்திமதி நிலையத்தில் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் துணைச்செயலாளர் இ சாகுல் அமீது தலைமையில் நடந்தது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தஞ்சை இராமனுதபுரம், மதுரை மாவட்டப் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, புயல், வெள்ள நிவாரண நிதிக் கமிட்டி ஒன்று அமைக்கப் பட்டது. தி. மு. க. செயலாளர் திரு. பாலகிருஷ்ணன் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மீறி நடப்பதால் அவரை செயலாளர் பதவியிலிருந்தும், செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டு தற்காலிகப்பொறுப்பாளராக, திரு. கே, தங்கராசு அவர்களை நியமித்திருக்கிறது.

சூரிய கிரகணத்தில் கலப்புத் திருமணம்

14—12—55 புதன் காலை மாயூரம், கூறைநாடு ஆசிரியர் வேலாயுத மன்ற கட்டிடத்தில் தோழர் ஆர் இராமானுசம் எம். சி. அவர்கள் தலைமையில் தோழர் இரா. இராமலிங்கம். தோழியர் செல்லத் துரை ஆகியோரின் கலப்புத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக் கொள்வதின் மூலம் திருமண நிகழ்ச்சி இனிது நிறைவேறியது

தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், வி. எ. பாண்டியன், மேக்கிரிமங்கலம் ஊரான்மைக் கழகத் தலைவர் தோழர் மணி, என் கிட்டப்பா ஆகியோர் கலப்புத்திருமண நோக்கம் பற்றியும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழி வாற்றினர்,

இத்திருமணம் சரியான சூரியகிரகண நேரத்தில் நடைபெற்றது வைதீகத்திற்கு ஒரு சவால் ஆகும். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி—நி வாகி

உடனே தேவை

கீழ்க்கண்ட இடங்களில், திராவிடன் விற்பனைக்கு - முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் உடனே தேவை.

காஞ்சீபுரம் - காட்பாடி
ஆற்காடு - திருப்பத்தூர்

விவரங்கட்கு,

'திராவிடன்'
16-99, அம்மன் கோவில் தெரு,
சென்னை-1.

இலங்கை

இராமநாதபுரம் மாவட்டம் செல்லரசன் கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் அவசரப் பொதுக் கூட்டம் நடந்த 14—12—55 புதன் கிழமை கொள்ளுப்பட்டி காலி வீதி 510/4 என் இல்லத்தில் தலைவர் அ. ச. வேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழகத்திலும்—ஈழத்திலும் புயல்—வெள்ளப்பெருக்கால் சேதமடைந்து வீடு—பொருள்—உயிர் இழந்து தவிக்கும் மக்களின் நிலையை மிக உருக்கமாக எடுத்துரைத்து புயல் வெள்ள நிவாரணம் வழங்க வேண்டியதை தோழர்களான க. கு. மாயக்கிருஷ்ணன், சிவிசுவாநதன், எஸ். எம். துரைச்சாமி க. க. தமிழ்நாதன் ம. சின்னமணி, மு. க. முனியசாமி, இரா. ச. பொன்னம்பலம் ஆகியவர்கள் பேசிய பின் கீழ்கண்ட முடிவு செய்யப்பட்டது.

'புயல் வெள்ளப் பெருக்கால் சேதமடைந்த மாவட்டங்களை நேரில் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண வேலைகளை கவனித்து வரும் சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் அவர்களை பாராட்டுவதுடன் வீடு பொருள் இழந்து தவிக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்க தமிழ் பெரு மக்கள் துணைபுரியும் படி சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது'

'புயல் வெள்ளத்தால் சேத மடைந்த கிராம மக்களுக்கும் தமிழக ஈழ மக்களுக்கும் சம்மேளனம் ரூ 600—0—0 புயல்—வெள்ள நிவாரண நிதியாக வழங்குகிறது.'

'புயல்—வெள்ள நிவாரணம்' சாதி அடிப்படையில் நடைபெறாமல் அவதியுறும் மக்கள் அனைவருக்கும் சமமாக நடைபெற வேண்டுமென இலங்கை சமூக நல சேவா அமைச்சர் சர். கந்தய்யா வைத்தியநாதன், சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் ஆகியவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.'

கோபிச்செட்டிப் பாளையத்தில் துணைப் பொதுச் செயலாளர்

கடந்த 11—12—55-ல் நகர தி. மு. கழக சார்பில் பெரியார் திடலில் தோழர் எஸ். எம். சரீப் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதசமயம் தோழர் ஜி. பி. தமிழ்ச்செல்வன் திராவிடட்டண் இசைசக கூட்டம் துவங்கியது, தோழர் 'ஊழியன்' ஆசிரியர் : ஜி. எ வெங்கடாசலம், ஈரோடு தோழர் எஸ். அப்பாவு, தமிழகத்தில் வீசிய கோரப்புயலின் விளைவுப் பற்றியும் வட நாட்டவரின் ஓரவஞ்சனை குறித்தும், பொதுமக்களை புதியதாக தி. மு. கழகத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டினார்கள்.

பின்னர் கோபி, நகரச் செயலாளர் கா. பெ. துரை, தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு ஓர் வரவேற்பு வாழ்த்து மடல் வாசித்து அளித்தார், பின்னர் அய்யம் பாளையம், கவுந்தப்பாடி, நல்ல கவுண்டன் பாளையம், ஆகிய கிளைக் கழகத்தின் சார்பிலும், கோபி நகர் 'திராவிடன், திராவிட நாடு' விற்பனையாளர் தோழர் ஜி. எம் ஆறுமுகம் சார்பிலும், தங்கமணி தொழிலாளர், மோட்டார் தொழிலாளர் சார்பிலும் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும், நூல் மாலைகளும், அணிவித்து, தங்கள் அன்பைக் காட்டினர்.

பின்னர் என். வி. நடராசன் அவர்கள் மிக விளக்கமாக திராவிட நாட்டின் பிரிவினையின் அவசியத்தைப் பற்றியும், மாநில மாநாட்டில் எடுக்கயிருக்கும் முடிவுகள் குறித்தும் சுமார் 2-மணி நேரம் சொற்பொழிவு ஆற்றினார்.

இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறியது.

சென்ற வாரம் வீசிய பயங்கரமான புயலினும், மழையினுலும் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம், தஞ்சை, மதுரை, மாவட்ட மக்களுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது. தீவிர நிவாரண வேலைகளை மேற் கொண்டுள்ள சென்னை அரசாங்கத்தை பாராட்டுவதுடன். அரசாங்க உதவியின் அளவை இன்னும் அதிகரிக்க வேண்டுவதுடன், குறைந்த பட்சம் புயலால் ஏற்பட்டுள்ள சேத அளவுக்காவது மத்திய அரசாங்கத்திடமிருந்து உதவி பெற வேண்டிய நடவடிகையை எடுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்துகிறது.

புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு 3 பசலிகளுக்கு பூரண வரி வஜா செய்யுமாறு அரசாங்கத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது விவசாயிகளுக்கு நீண்ட கால கடன் கொடுத்து உதவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு இப்பொதுக் கூட்டம் வற்புறுத்துகிறது. ராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களில் ஏரிகளின் நிரந்தரப்பாது காப்புக்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியத்தை இப் பொதுக் கூட்டம் வற்புறுத்துகிறது

சென்னை புயல் நிவாரண நிதிக்குத் தாராளமாக உதவுமாறு பொதுமக்களை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. பின்னர் கோபி செயலாளர் கா. பெ. துரை நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

சிந்தாதரிப் பேட்டை

பொதுச் செயலாளர் அறிக்கைக் கிணங்க 29-வது வட்ட தி. மு கழக செயலாளர் தோழர் அ. பொ. அரசு M C அவர்கள் தலைமையில் 11-12-55 அன்று 29, 30-வது வட்ட தி. மு. க, கிளைகளின் சார்பில் ஊர்வலமாகச் சென்று புயல் நிவாரண நிதிக்காக வசூலித்த விவரம் கீழ் வருமாறு:

உண்டியல் மூலம் பணம்	200-3-2
பழைய புதிய ஆடைகள்	1086
அரிசி படி	88

என அக்கிளைகளின் செயலாளர்கள் அறிவிக்கிறார்கள்.

43-வது வட்டம்

16—12—55 முதல் மாலை 6-மணி முதல் இரவு 8½-மணி வரை மீர்சாகிப் பேட்டை வெங்கிடாசல முதலி தெரு 147-ம் எண்ணுள்ள கழகப்பணி மனையில் தி மு. கழகப் புது உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுவதாக செயலாளர் மு: புரட்சிமணி தெரிவிக்கிறார்.

*

43-வது வட்ட. தி. மு. கழக சார்பில் 11—12—55 அன்று காலை 9-மணிக்கு, மீர்சாகிப்பேட்டை முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச்சென்று புயல் நிவாரண நிதி திரட்டினர். ரூ 81-9-0-ம் 21¾-படி அரிசியும் பழைய துணிகளும் வசூல் செய்தனர், 43-வது வட்ட நகரசபை உறுப்பினர் திரு எம். ஏ. கரீம் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தார்.

சென்னை 12-வது வட்ட தி மு. கழகம்

சென்னை 12-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 17—12—55 சனியன்று காலை 10-மணியளவில், புயல் நிவாரண நிதி திரட்டும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. வட்டத்தின் முக்கிய வீதிகளில் சென்று உண்டியல் மூலம் வசூல் செய்ததில் பதினைந்து ரூபாய் வசூலாகியது, என செயலாளர் அறிவிக்கிறார்

அழகிரி நூலகம் திறப்பு விழா

18-12-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை திரு. வி. க திடலில் திரு.வி.க. மறுமலர்ச்சி மன்ற சார்பில் அழகிரி நூலகம் திறப்பு விழா என். கிருட்டினன் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேற்படி நூலகத்தை கவிஞர் கண்ணதாசன் திறந்து வைத்து திறப்புரை ஆற்றினர். தொடர்ந்து தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், க, அறிவழகன், கதிர் சுப்ரமண்யம் முதலியோர் பேசினர். பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர் கூட்டத்தில் புயல் நிவாரண நிதிக்கென ரூ. 11-4 3 வசூலிக்கப்பட்டது.

விளாத்திக்குளம் தோழர் ஒருவர் கவிஞர் கண்ணதாசனிடம வெள்ளப் பிரதேச மக்களுக்கென 36-கைத்தறி வேட்டிகளை ஒப்படைத்தார் நன்கொடையாக. பிறகு தோழர் லோ. இளமாறன் அவர்களால் புயலால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், புயல் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள முதலமைச்சர் காமராசர், தி. மு. க. பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

திருச்செங்கோடு

திருச்செங்கோடு டவுன் காங்கிரஸ் கமிட்டி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், ஆகிய மூன்று கட்சிகளின சார்பில் புயல் நிவாரணக் கமிட்டி அமைத்து பொதுமக்களிடம் ரூ. 565-0-0, துணி 320 கஜம் ரெடிமேட் ஆடைகள் 14-ம் வசூல் செய்து முதன் மந்திரி காமராசர் பெயருக்கு அனுப்பப்பட்டது.

முதல் பக்கத்தொடர்ச்சி......!

தந்துவருபவர்கள் தென்னாட்டு அரசியல் அறிஞர்கள்தான் என்பதை ஐ. நா. சபையின் கடந்த கால நிகழ்ச்சிகளே எடுத்துக் காட்டும் இவ்வாறிருந்தும் நம் நாடு, உலக நாடுகளிடையே நேரிடையான தொடர்பு கொள்ள உரிமையில்லை. இத்தகு இழி நிலை இன்னும் நீடிக்கலாமா—தேசியத் தோழர்களே சிந்தியுங்கள்.

நறத்தாழ ஏழரை கோடி மக்களைக் கொண்ட தென்னாட்டவருக்கு வடநாட்டவர் தர்மகர்த்தர்களா? ஆனால் ¾ கோடி மக்களைக் கொண்ட இலங்கை நேப்பாளம் போன்ற நாடுகள் தனிஉரிமை பெற்றிருக்கிறது. அகில உலகாயுத வாதமோ—ஏக இந்தியா உபதேசமோ இதற்கு குறுக்கே நிற்க வில்லை! ஆனால் தென்னாட்டு மக்கள் தனி உரிமை கேட்டால் தான் ஏக இந்தியாவின் ஆயுளுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகிறதாம்! இவ்விகபத்தாம்பசலிப்பேச்சினை டெல்லி தேவதைகள் கூறுவதில் அர்த்த மிருக்கலாம். ஆனால் தென்னாட்டு தேசியத் தோழர்கள் இன்னும் இது போன்ற மட்டரகமான வாதத்தில் ஈடுபடலாமா!

இலங்கை--குதூகலப்படுகிறது நேப்பாளமோ நிமிர்ந்து நிற்கிறது — ஆனால் தன்மானமுடன் வாழ்ந்த நமது திராவிடம் தாழ்வுற்றிருப்பதா—எனவே நம்மையும் நம் நாட்டையும் தாழவைத்துள்ள தீய சக்திகளைத் தகர்த்தெறிவோம் வாரீர்.

சுல்தானு ரசியா தொடர்ச்சி

prejudices which some of her nobles entertained against her Razia would have become one of the great sovereigns of India'

A M Allapichai B A B L,
Justa Peep into the Muslim Mind

"ரசியா நேர்மையும், பெருந்தன்மையும், விவேகமும், கொண்டவளாயிருந்தாள். அவள் கற்றோரை ஆதரிப்பவளாக இருந்தாள். தனது குடிகளை அவள் நேசித்தாள் அவளைச் சூழ்ந்திருந்த ஒருசில பிரபுக்களின் முட்டாள் தனமான பொறாமை பொச்சரிப்புக் கணைகள் மட்டும் அவள்மீது வீசப்படாமலிருந்தால், அவள் இந்தியாவின் புகழ்வாய்ந்த பேரரசர்களுள் ஒருவளாகத் திகழ்ந்திருப்பாள்!"

என்று மிக மிக அனுதாபத்தோடு தெரிவிக்கிறார் அந்த எழுத்தாள நண்பர்!

எனவே அந்தத்துருக்கிய பிரபுக்கள் செய்தது முட்டாள்தனம் என்பது மட்டுமல்ல; எவ்வளவு வேதனையைப் பரிசாகவும் தந்த கொடுமைகள் நிறைந்த சதிச்செயல் என்பதும் நமக்கு நன்கு விளங்கும்! [தொடரும்]

சேலம் மாவட்ட மாணவர்களுக்கு!

சேலம் மாவட்டத்தில் தி. மா. மு க. கழகத்தின் பணியினை செம்மைப் படுத்தவும், கிளைக் கழகங்கள் அமைக்கவும், மாவட்டக் கழகம் அமைக்கவும் மாவட்ட முழுமையும்உள்ள நமது இயக்க மாணவர்கள் கலந்து பேசுவது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.
1—1—56 ஞாயிறு காலை 10-மணிக்கு சேலம் நகரம், கிச்சிப்பாளையம் தி. மு. கழக கட்டிடத்தில நமது இயக்க மாணவர்கள் கூட்ட மொன்று நடைபெறும். சேலம் மாவட்டத்தில் உள்ள தி. மு. கழக மாணவர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுகிறேன்.

அன்பன் வி சிவப்பிரகாசம்,
அமைப்புக்குழு உறுப்பினன் தி, மா. மு. கழகம்,

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்..

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஹோட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

ஆளை மயக்கும் 'அகில பாரதம்!'

இவ்வாண்டு நவம்பர் திங்களில், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலும் வெள்ளமும் விளைத்த சேதங்களும்—நாசங்களும் இன்னும் சரி செய்யப்படாத நிலையிலேயே காட்சி யளிக்கின்றன. தங்களால் இயன்றவரை மற்ற பகுதி மக்கள் நிவாரண வேலைகளில் ஈடுபட்டு வருவதும் நாடறிந்த ஒன்று.

மற்ற ஆண்டுகளில் ஏற்பட்ட சேதங்களைக் காட்டிலும்—இவ்வாண்டு புயலினாலும் வெள்ளத்தினாலும் ஏற்பட்ட சேதாரம் ஈடுகட்ட முடியாத தொன்றாகும் என்பதை சர்க்கார் அறிவிப்புகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்—சீரழிந்து போயிருக்கும் நமது தமிழகத்தின் தென்பகுதிகளை செம்மைப் படுத்தும் வேலையில் சென்னை மாநில அரசினரும், நாட்டில் உள்ள பல்வேறு கட்சியினரும் ஈடுபட்டு வருகின்றனர்

தமிழகத்தின் நெருக்கடியான நேரங்களில் தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்ற ஒரு மாபெரும் விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகமும்—இவ்வாண்டுப் புயல் வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்காக ஓராயிரம் ரூபாயை தனது ஒன்றரை லட்சம் உறுப்பினர்களின் அனுதாபத்தோடு, சென்னை சர்க்காருக்கு அனுப்பி வைத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்ற ஓராயிரம் ரூபாய்களோடு அதன் பணி முற்றுப் பெற்று விடவில்லை. ஆங்காங்குள்ள நமது கழகத் தோழர்கள் வீதிகளில் ஊர்வலமாக வந்து உண்டியல் மூலம் பண வசூல் செய்தும், பழைய ஆடைகள், பலரகமான உணவுப் பொருள்கள் போன்றவற்றை வசூல் செய்து புயல்-வெள்ளப் பகுதிகளுக்கு சர்க்கார் மூலம் அனுப்பிவருகின்றனர்.

தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க, செயலாளர்கள் புயல் வீசிய பகுதிகளுக்கும், வெள்ளம் புகுந்த பகுதிகளுக்கும் சென்று, அங்கு அவதிப்படுவோருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி — தங்களாலான உடனடி உதவிகளைச் செய்தும் வருகின்றனர்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக நமது பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் சென்ற வாரத்தில் புயல்—வெள்ளத்தால் அலங்கோலமாக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறியதோடு, அங்குள்ள கிளைக் கழகத் தோழர்களை உடனடி நிவாரண வேலைகளில் ஈடுபடுமாறும் கூறி வந்துள்ளார்.

இவற்றை யெல்லாம் ஏன் இங்கே கூறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதென்றால் தமிழகத்திற்கு நெருக்கடி ஏற்பட்டாலோ அல்லது விவரிக்க முடியாத நாசங்கள் ஏற்பட்டாலோ நாம் அவற்றைத்தடுத்த—நிறுத்த என்றுமே தயங்கியதில்லை.

நாட்டு மக்களுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக்கண்டு மனம் புழுங்கிச்சாகும் சில அநாமதேயங்களும், அரைகுறைகளும், நம்முடைய தூய்மையான பணியை இழித்தும் பழித்தும், கேலி, கிண்டல் இவைகளால் தாக்கியும் வருகின்றன! இழி சொற்களையும் பழிமொழிகளையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமும், எதையும் தாங்கும் இதயமும் படைத்தவர்கள்தான் நாம் என்றாலும், தங்களை மறந்து உளறிக் கொட்டுகின்ற அந்த ஒரு சில அரட்டைகளுக்கு நமதுபணியினை எடுத்துக்கூறி அறிவுபுகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது!

இருக்கின்ற தினசரிப் பத்திரிகைகளிலேயே வயது முதிர்ந்ததும், கிழவிப் பருவத்தை அடைந்துள்ளதுமான "சுதேசமித்திரன்", நாட்டில் நடந்த வற்றையும், நடப்பதையும் மறந்துவிட்டு ஏதேதோ எழுதித்தள்ளுகிறது!

"நாமெல்லாம் இந்தியர், நாமெல்லாம் பாரத சகோதரர்கள், நாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள், என்று ஏக இந்திய பஜனை பாடுகின்ற வடவர்கள் தமிழகத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் நிலைதடுமாறி நிற்கின்றமக்களுக்கு ஏன் ஒருவித அனுதாபச் செய்தியோ அல்லது ஆறுதல் வார்த்தையோ அனுப்பவில்லை?"—என்று நாம் கேட்பது தவறாம!

"வடக்கிற்கும் தெற்கிற்கும் வித்தியாசம் இல்லையென்கிறீர்களே, தெற்கிலே மக்கள் திகைத்து நிற்கிறார்களே, வடக்கில் வசதியுடன் வாழ்வோர் என்ன செய்யப்போகின்றனர்?" என்று கேட்பவர்கள் அரசியல் சூதாடிகளாம்.

'நாட்டின் மிகப் பெரும் பொறுப்புக்களை வகித்துவரும் வடவர்களுக்கு ஒரு வாயச் சொல்லுக்கா பஞ்சம் ஏற்பட்டது!" என்று கேட்பவர்கள் பிஞ்சில் பழுத்தவர்களாம்! சுய விளம்பரக்காரர்களாம்!

18-12-55-ந் தேதிய "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு இதழில் வடநாட்டிற்கு வக்காலத்து வாங்கும் முறையில் நம்மையும்—நமது பணியையும் குறை கூறுகிறார் ஒருவர்!

"காற்று வாக்கிலே" அவருக்கு வந்த வதந்திகளை வைத்துக்கொண்டு வம்பளக்கிறார் "அரட்டை" என்று பெயர் புனைந்த அத் தோழர்!

தமிழகத்தின் வளத்தைச் சுறையிடும் வடவருக்கு, தங்களது அதிகார முத்திரையை தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பதியவைத்துக் கொண்டு "பாரதம்" பேசுகின்ற வடவருக்கு, தமிழகத்தின் தெருக்களில் வட்டிக் கடை விரித்து தங்களது நாட்டிற்கு பணத்தைக் கொள்ளையிட்டு போகும் வடவருக்கு, தாங்கள் பிழைக்க வந்திருக்கும் நாட்டு மக்கள் தத்தளிக்கின்ற நேரத்திலும்கூட ஆறுதல் கூற ஒரு வாய்ச்சொல்கூடவா கிடைக்காமற் போய் விட்டது?

"மாநில மாநாட்டுக்கென பல்லாயிரக் கணக்கில் நிதி வசூல் செய்யும் கூட்டத்தார் பெரும் புயல் நிவாரணத்துக்கென அள்ளிக் கொடுத்ததோ ஓராயிரம் ரூபாய். ஆனால் அதைப் பிரபலப் படுத்திக் கொண்டதோ பிரமாதம். ஒரு லட்சம் உறுப்பினர் கண்ணீராம்; காணிக்கையாம்! பதறிப் பத்தாயிரம் அனுப்பியது பாரதத்தின் பழம் பெரும் ஸ்தாபனம் காங்கிரஸ். அதற்குமதிப்பில்லை"

புலம்பி யழுகிறார் 'அரட்டையார்.' மாநில மாநாட்டுக்கென பல்லாயிரக் கணக்கில் நிதி திரட்டுகிறோமாம் நாம்! நம் இயக்கத்தில் என்ன "காலி செக்" (Blank cheque) குகளை கிழித்துக் கொடுக்கும் பிரலாக்கள் குவிந்தா கிடக்கிறார்கள்! நாம்தானே வசூல் செய்ய வேண்டும் மக்களிடம்!

இவ்வாண்டு புயலும் வெள்ளமும் ஏற்படுத்தியுள்ள சேதத்தை ஈடு செய்ய சர்க்காரினால் மட்டுமே முடியும் என்ற காரணத்தால்தான்—சர்க்காரே அந்த நிவாரண வேலையில் ஈடுபடட்டும் என்றெண்ணி, சர்க்காருக்குத் துணையாக நாமும் ஆங்காங்கே நிதி வசூல்களை நடாத்தி வருகிறோம்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருச்சி — தஞ்சையில் புயல் அடித்தபோது நாம் 25000 ரூபாய்களுக்கு கைத்தறி ஆடையும், பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பழைய ஆடைகளையும் நிதியாக அனுப்பி வைத்ததை அரட்டையார் மறந்து விட்டாரா அல்லது அதை எழுத மனந்துணிய வில்லையா?

மூன்றாண்டுகளுக்கு முன்னர் புயல் வீசியபோது சர்க்காரும், மற்றோரும் தூங்கிக் கிடந்த காரணத்தால்தான் வளைந்துவிட்ட திருச்சி தஞ்சை மக்களது வாழ்வை செம்மைப்படுத்த நாம் நிதி திரட்டி கைத்தறி ஆடைகளை அனுப்பி வைத்தோம். நாம அன்று செய்த அந்த நல்ல காரியத்தின் பிரதிபலிப்புத்தான் இன்று நாடெங்குமுள்ள மற்ற கட்சிகளும் அமைப்புகளும் புயல் நிவாரண நிதி திரட்ட ஆரம்பித்துள்ளன!

இன்று பதறிப் பத்தாயிரம் அனுப்புகிறதே பாரதத்தின் பழம்பெரும் ஸ்தாபனம் காங்கிரஸ், — மூன்றாண்டுகளுக்கு முன் வீசிய புயலின்போது ஒரு பைசாகூட அனுப்பவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அனுப்பியது ரூ. 25000 என்பதை 'அரட்டை'யார் நினைவிலிறுத்திக்கொள்ளட்டும்!

உலக சமாதானம் ஓங்குக! என்று உரத்தகுரலெழுப்பிக்கொண்டு ஊரெல்லாம் சுற்றிவரும் நமது முடிசூடா மன்னர், தான் ஆளும் நாட்டின் ஒரு பகுதியில் புயலும் வெள்ளமும் சேதத்தை ஏற்படுத்தியபோது ஒரு அனுதாப வார்த்தைகூட சொல்லவில்லை! காரணம் புயல் வீசிய பகுதி தென்னாடு—தமிழ்நாடு! ஆதலால்தான்!

தமிழகத்தில் நெருக்கடிமிக்க இந்த நேரத்தில் 'அயர்ந்த நித்திரை' செய்துகொண்டிருக்கும் ஆசியாவின் ஜோதி—மூன்று மாதத்திற்கு முன்னர் உத்தர பிரதேசத்தில் வெள்ளம் என்றதும்-விமானத்தில் விரைந்து சென்று —வேண்டியது செய்தாரே — அப்படிப்பட்ட நேரு ஏன் இன்று தமிழகத்தில்புயல் வீசியபோது வரவில்லை? என்று கேட்டால் உடம்பெரிச்சல் கொள்கிறார் அரட்டையார்!

தமிழகத்தில் நகரசபைத் தேர்தல்கள் நடந்துகொண்டிருந்தபோது, 'மின்னல் வேகத்தில்,' சுற்றுப் பயணம் செய்த 'பாரதத்தின் தலைப் புதல்வர்.' இப்போது அதே தமிழகத்து மக்கள் வெள்ளத்தாலும் புயலாலும் சூறையாடப்படும்போது, ஏன் வரவில்லை என்று கேட்டால்-சீறுகிறார் அரட்டையார்!

"ஒன்றரை லட்சம் ரூபாய் உதவி அனுப்பினர் ஐக்கிய "பாரதத்தின் பிரதமர் நேரு"—என்று அங்கலாய்த்துக் கொள்கிறார் சுதேசமித்திரனின் "அரட்டையார்"

'பிரதம மந்திரி" வெள்ள நிவாரண நிதி—எனவொரு நிதி வசூலிக்கிறார்களே வடக்கில்! அதற்கு தென்னாட்டில் இருந்தும் பணம் அனுப்பப்படுகின்றன; அந்தப் "பிரதம மந்திரி வெள்ள நிவாரணத்திற்கு" வெளிநாட்டோரும் வாரி வழங்குகின்றனர்; லட்சக்கணக்கில்! அவற்றில் ஒன்றரை லட்சம் ரூபாயைத்தான் அனுப்பினார் நேரு. மத்திய அரசாங்க கஜானாவில் கைவைக்கவில்லை அவர். இதைத் தெரிந்துகொள்ளாமல் "நேரு உதவி செய்தார்' ஒன்றரை லட்சம் கொடுத்தார்!" எனக் கூப்பாடு போடுவது அழகல்ல என்பதை அரட்டையார் போன்றோர் தெரிந்துகொள்ள வேண்டும்

"முதலமைச்சர் செய்த பணியை மாவட்ட மக்கள் அறிவர். 'பிஞ்சில் பழுத்தவர்' நற்சாட்சி தேவையில்லை" என்று கூறுகிறார் 'அரட்டையார்."

முதலமைச்சர் செய்த பணியை நாம் மறந்துவிட வில்லை.

நன்றி செலுத்தவும் பாராட்டவும் கடமைப்பட்டுள்ளோம். இதற்கு முன்பிருந்த முதலமைச்சர் சென்ற புயலுக்கு சென்னையிலேயே தங்கியிருந்ததைப்போலல்லாமல், இவர் உடனடி நிவாரணங்களில் ஈடுபடுவதைக் கண்டு மகிழவும் செய்கிறோம். ஆனால் நம்முடைய நற்சாட்சியை விரும்பவில்லை அரட்டையார்! நாம் பிஞ்சில் பழுத்தவர்களாம்! பாவம் வயது முதிர்ந்துவிட்ட "சுதேசமித்திரன் அரட்டையாருக்கு" திட்டுவதற்குக்கூட வார்த்தை கிடைக்கவில்லை. அவ்வளவு பஞ்சபுத்தி நம் இயக்கத்தில் இருக்கின்ற ஒரு காதொடிந்த ஊசியை "வசவு மொழிகளை" தானும் எழுதித் திருப்திப்படுகிறார். நமகதுள் சிண்டு முடிந்துவிடும் வேலையில் ஈடுபடுகிறார். பாவம், பரிதாபம்

டில்லி ஆட்சி பீடம் இன்று மட்டுமல்ல என்றுமே தென்னாட்டின் மீது அக்கறைகொள்ளவில்லை, கைத்தறி நெசவாளர்கள் பிரச்னையில்கூட தன் கல்நெஞ்சத்தைக் காட்டிவிட்டது அப்போதும் நாம் தான், நாட்டிலே முடங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை வீதிவீதியாக சென்று விற்றுத் தந்தோம்.

மக்களது துயர் துடைக்கும் பணிகளில் நாம் என்றுமே பின் வாங்கியதில்லை. மற்ற கட்சிகளைப்போல அதனை வெளிச்சம் போட்டு விளம்பரப் படுத்திக் கொண்டதுமில்லை. ஆனால் நமது தூய்மையான பணிகளை மறைக்க முயல்கிறார்கள் ஒரு சிலர்! நமது இயக்கத்தை மறைத்துவிட நினைக்கிறார்கள்! அதற்காக மக்களது கவனத்தை வேறு பிரச்சனைகளில் திரும்பி விடுகிறார்கள். மக்களிடம் நமக்கு உள்ள ஆதரவைக் குலைக்க எண்ணுகிறார்கள்! இதற்காக வட நாட்டுக்கு வக்காலத்து வாங்கும் ஏஜண்டுகளாகின்றனர் சிலர்! பாரதம் பேசி ஆளை மயக்க எண்ணுகின்றனர் மற்றும் சிலர்! ஆனால்இவர்களது போக்கிற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும்படியாகச் செய்துவிட்டது டில்லி மூலவர்களின் கவலையற்ற போக்கு!

சுதேசமித்திரனின் "அரட்டையார்" இனியாகிலும் இந்த உண்மையை உணர்ந்து நல்லறிவு பெற வேண்டுகிறோம்!

ந. சோ. சு.



திராவிடர் திருநாளன்று மகத்தான விருந்து!

100 பக்கங்கள்

திராவிடன் பொங்கல் மலர்

விலை ரூபாய் ஒன்று

நீங்கள் இனிதே சுவைக்க யிருக்கும் அவ்விருந்தில், அறிஞர் அண்ணா அவர்களும்

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்	க. அன்பழகன்	வாணன்
ஈ. வி. கே. சம்பத்	டி. கே. சீனிவாசன்	இராதாமணாளன்
கே. ஏ. மதியழகன்	வாணிதாசன்	தென்னரசு
மு. கருணாநிதி	ப. உ. சண்முகம்	இளஞ்சேரன்
சி. பி. சிற்றரசு	இரா. சு. தங்கப்பழம்	மா. தங்கவேலர்
கா. அப்பாதுரையார்	சத்தியவாணிமுத்து	தில்லை. மறைமுதல்வன்
மு. வரதராசனார்	அருண்மொழி	மு. சண்முகம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	சுரதா	கௌதமன்
கண்ணதாசன்	எம். எஸ். ராமசாமி	திருவேடம்
காஞ்சி. கல்யாணசுந்தரம்	முகவை பாண்டியன்	அலிசேக் மன்சூர்

மற்றும் பல இளம் எழுத்தாளர்களின் எண்ணக் குவியல் : : என். வி. என். தீட்டும் பிரத்யேகக் கட்டுரை

ஓவிய நிபுணர் பாலு சகோதரர்கள் வரையும் கண் கவர்—முகப்பு.

தோழர்களே, இவ்விருந்துக்கு உடனே ரூபாய் ஒன்று செலுத்தி எமது ஏஜெண்ட் தோழர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சந்தாதாரர்கள், விருந்துக்குத் தனியாக ரூபாய் ஒன்று அனுப்பி வைக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம்.



ஐயா ஒரு சேதி கேளும்!

"அறு"

சூங் சீங் லீங்!

ஏதோ மந்திரவாதி, பயமான சொற்களைத் தூவி, அச்சுறுத்துவதாக நினைக்க வேண்டாம். சூங் சீங் லீங் சீனதேயத்து மங்கையர் திலகம். அந்த அம்மையார் காலஞ்சென்ற டாக்டர் சன்யாட்சென் என்ற அறிஞரின், சீனதேயத்துக் காவலனின், நல்லோனின் அருமை மனைவியார். அண்மையில் மலர்ந்த மக்கள் சீனாவின் முன்னேற்றக் குழாமின் துணைத் தலைவராக வீற்றிருந்து அரும் பணி ஆற்றுகிறார். அவரே மேடம் சன்யாட்சென் என வழங்கப் படுபவர்.

அவர் கடந்த வாரம், பிரதமர் நேருவின் அழைப்பிற் கிணங்க தில்லி போந்தார்.

சீனத்திற்கும் இந்தியாவிற்கும் நெடுங்காலத் தொடர்பும், உறவும், நட்புப் பரிமாற்றமும் உண்டு, அத் தொடர்பையும், உறவையும், நட்பையும் புதுப்பிக்கவே மேடம் சன்யாட்சென் டில்லி நோக்கினார்.

இங்கே பாகியான் என்ற சீன அறிஞர், சந்திரகுப்த விக்கிரமாதித்தர் காலத்தில் [375—413 கி. பி] இந்தியா போந்து இந்தியரின் மேன்மையை உலகுக்கு அறிவித்ததையும் :

ஊயூன்சியாங் என்ற சீனப் பெரியார், ஹர்ஷர் காலத்தில் [606—648 கி. பி.] இந்தியா போந்து, தமிழ் நாட்டின் உயர்வை—"யான் பார்த்த நாடுகளில் எனக்கு இனிமை யூட்டியது தமிழ் நாடே"— என்று கூறிப் போந்ததையும் :— நினைவூட்டிக் கொள்ளல் நன்று.

அதோடு, ஊழல் மலிந்த, சர்வாதிகாரத் திமிரினால், சியாங்கே ஷேக் ஆட்சியில் சீரழிந்து தவித்த சீனாவை, மக்கள் சீனாவாக, செஞ்சீனாவாக மாசே துங்கினால் மலரச் செய்த பிறகு சூ என்லாய் என்னும் நாமம் கொண்ட சீனப் பிரதமரும் கடந்த ஆண்டில் இந்தியா வந்து திரும்பியதும் நினைவு கூறத்தக்கதாகும்.

சீனப் புரட்சிக்கு முதன் முதல் வித்திட்டவரே டாக்டர் சன்யாட்சென். அவரே, இன்று மலர்ந்து மகிழும் மக்கள் சீனாவின் முதல் பிதா எனலாம். அவரது மனைவியார் அது முதல் இந்தியா வரவேண்டுமென்று துடியாய்த் துடித்தார். பல ஆண்டுகள் அங்கிலேயே வாடினார்.

1928-ல் இங்கு வரலாமென முனைந்தார். எண்ணம் கை கூடவில்லை.

1931-ல் மீண்டும் முயற்சி எடுத்துப் பார்த்தார்; திருவினையளிக்கவில்லை.

காரணம்? அப்போது இந்தியாவில் வெள்ளையர்கள் கொடிகட்டி ஆண்டார்கள். மேடம் சன்யாட்சென் புரட்சித் தலைவரின் மனைவி என்ற ஒரே காரணத்தால், அவருக்கு இந்தியாவில் அடிவைக்க அனுமதி, அதாவது "விசா" என்று கூறுகிறோமே, அது கிடைக்கவில்லை.

அடிமை இந்தியா, விடுதலை இந்தியாவாக மாறின இவ்வேளையில், இந்த வாய்ப்பை பயன்படுத்த மேடம் சன்யாட்சென் இந்தியா வந்தார்.

பழைய நட்புறவைப் பற்றிப் பேசியும், புதிய நட்புறவிற்கு எருவிட்டு விட்டும், சீனாவின் பால் இந்தியா கொண்டுள்ள அக்கறைகளைப் பாராட்டிவிட்டும் கடைசியாக இந்தியாவின் சூபிட்சத்தை விழைந்து உருகிவிட்டும் திரும்பினார்.

அவர் இந்தியாவின் அரசாங்க விருந்தினராக, தில்லியிலேயே டிசம்பர் 16-லிருந்து 21-வரை தங்கிவிட்டுத் தம் நாடு திரும்பி விட்டார். அவர் சீனப் பெரியார் ஊயூன் சியாங் புகழ்ந்த நம் தமிழகத்திற்கு வராமற்போனது ஒரு குறைதானே ?

●

அபயமளித்த ஆலமரம்!

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை"—இது மங்கல வழக்கு! "தீயோர் ஒருவரே உளரெனினும் சுழன்றடிக்கும் சுருவளி"—இது அமங்கல வழக்கா! அதெல்லாம் ஒன்றுமில்லை, எல்லாம் இயற்கை விதிகள் நல்லவராயிருந்தாலும், பொல்லாராய் இருந்தாலும் இயற்கைக்குக் கவலையில்லை. நாம் வாழ்வோ, தாழ்வோ பார்த்துப் பக்குவமாகப் பணியாற்றுந் தன்மை இயற்கைக்குக் கிடையவே கிடையாது அப்போது நாம் தான் இயற்கைக்குப் பணிந்து, தெளிந்து, திருந்தி வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் பகுத்தறிவு கொண்டுள்ளோம் எனவே மழை வேண்டுமென்று பூசா உபசாரம் செய்வதோ, சுருவளி வேண்டாமென்று தடுப்பு பூசை செய்து அறிவைப் பாழாக்கிக்கொள்வதோ அறிவீனம்! மௌடீகம்!"

கடந்த மாதம் நவம்பர் 30-ல் கடும் புயல் வீசி நம்மையெல்லாம் கவலையில் ஆழ்த்திவைத்திருந்தது. இயற்கையின் அச்சேஷ்டை, தமிழகத்தின், தென் கிழக்குக் கடற்கரை வட்டாரங்களைத் துவைத்து எடுத்து இருக்கிறது. பல நூறு உயிர்களும், உயிர் இனங்களும் பலியாயின. மாடி கட்டிடங்கள் தூள் தூள்களாயின புல்லாலும், தென்னை, பனை, ஓலைகளாலும் வேய்ந்த ஆயிரமாயிர ஏழையர் குடிசைகள் பிய்த்தெறியப்பட்டுப் பட்டங்களாகப் பறந்து, வெள்ளத்தில் தெப்பங்களாக மிதந்து சென்றன. பயிர்கள் தலை தூக்காது நாசமாயின. வானமே பிளந்து மூர்க்கமாகப் பெய்யும் மழைக்கும், கடுங்கடிக்கும் சூறாவளிக்கும்—மக்களும், மாட மாளிகை குடிசைகளும் எம் மாத்திரம்! அதிர்ச்சி! பெரும் அதிர்ச்சி!!

நாம் கரடியாய்க் கத்துகிறோம்: வடக்கு வடக்குதான்! தெற்கு தெற்குதான்! தென்னாட்டின் வறுமை ஓசையும். "எஸ். ஓ எஸ்" அபயக் குரலும் வடவருக்கு கேட்காது! அவர்கள் காதிருந்தும் கேளாக் காதர்களென்று'— அதற்கு திருப்பி மேக்குக் கிடைக்கும் பதக்கம்! கருத்துக் குருடர்கள்! துண்டாடத் துடிக்கும் துரோகிகள்!!—போதும்! போதும்!

இப்படி எல்லாம் நினைப்பவர்கள் இப்போது நினைத்துப் பார்க்கட்டும் பீகார் வெள்ளமா! நான் பிறந்த பிரதேசமாச்சே! ஓடு நேரே! ஆவன உடனே செய்! அஸாம் புயல்—வெள்ளக் கொடுமையா! ஐயோ! முடுக்கு 'ஏரோப்ளேனை!' விரைவாய் ஓட்டு! கூப்பிடு ராஜ்யசபை அங்கத்தினர்களை! பார்த்தீர்களா! நம் அஸாமிய ஏற்பட்ட அவதியை! பஞ்சாபில் வெள்ளமா அந்தோ! தெரியப் படுமே! மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டுச் சென்று காட்டி உதவிகேள்!

தமிழ் நாட்டில் வெள்ளச் சேதமா? புயல் கொடுமையா! ஆயிரம் பேர் மாண்டார்களா? — ஏனப்பா இப்படி எனது ஆழ்ந்த தூக்கத்தைக் கலைக்கிறாய்? இன்னும் ஐந்து நாள் தூக்கம் பாக்கியிருக்கிறது. பிறகு வா! போ!— சரி!—ஐயா, தமிழ் நாடே வெள்ளத்தில் மூழ்கி கவலையில் ஆழ்ந்து கிடக்கிறது—இது என்ன சனியன்! இந்தா தொலைந்துபோ! "ஒன்றரை காசு"!— இப்பக்கம் இனி திரும்பாதே!— இல்லைங்கோ! ஒரு ஆறுதல் மொழி கூறினால் அதுவே அநேக கோடி அளித்ததற்குச் சமம்!—சரி, சோதனைக்கு ஆளானவர்களுக்கு அனுதாபம்! போ! போ!

தங்கள் கூடாரத்திலிருக்கிற மற்றவர்களையுங் கண்டு! அவர்களையெல்லாம் எழுப்பாதே! நான் செய்ததே அதிகம்! இப்படியேதான் வழி நேரே போ! திரும்பாதே "படக்!" கதவு சாத்தப்பட்டுத் தாழ்ப்பாள்! தீர்ந்தது!

ஏ! வடக்கே! இதுதானா உன் கருணை என் இந்தப் பாராமுகம்? வடக்கே தலை வைத்துப் படுக்காதே என்று கூறும் எனது அண்ணன் தம்பிகளையெல்லாம் திராவகம் ஊற்றி எரித்தேனே! வாள் கொண்டு வெட்டினேனே! தடிகொண்டு மண்டைகளை உடைத்தேனே! அவையெல்லாம் எவ்வளவு மூட்டாள்தனம்! மதியீனம்! குருட்டுத்தனம்! என்பது இப்போதுதானே தெரிகிறது!

காட்டிலிருக்கும் பஞ்சவர்ணக் கிளியைவிட கையிலிருக்கும் பச்சைக் கிளி மேல் என்று இப்போது தானே அறிவொளி பெறுகிறேன்! என் நாடு என் நாடுதான்! அது எனக்குக் கிடைக்கவே இனி பாடுபடுவேன்! போதும் உனது சகவாசம். உன்னைப் பார்த்தாய் விட்டது. இனி தெற்கு நோக்கியே தலை இடுவேன்! வடக்கே நீ வாழ்! உனக்குப் போட்டியாக நான் வாழ தெற்கை வாழ வைத்துக் கொள்கிறேன்! இந்த உறுதிமொழியை ஏற்றுக் திருவருள் செய்கிறேன். திராவிட நாடே! இனி நீயே கதி! என் நிலை உனக்கே உன்னுடன் தான் கலந்த அறிவுகூடும் எனக்கு அன்னமளி, மானங்காக்க உடையளி. இருக்க வீடுகொடு பொருள் கொடு. வாழவைக்கும் பண்பு உன் உடன் பிறந்த ஒன்றென்பதை இன்று உணர்ந்து கொண்டேன், நீ வாழ நான் வாழ வேண்டும்!

இம்மாதிரி எத்தனை உள்ளங்கள் குமுறிக் தவிக்கின்றன? அவர்களது தவிப்பை மாற்றுவது யார்?

ஆழவேர்விட்டு அகலவிழுது படர்ந்து, இருபது ஆண்டுகளாக நிற்கும் ஆலமரமொன்று, ஆறு மக்களை தன் விழுதிலும் இருகிளையிலும் கிளையின் கணுவிலும், புயல் சுழன்றடிக்க உயிர்களைக் கொள்ளை கொண்ட வேளையில் ஏற்றுக் காப்பாற்றியதாம் அந்த ஆலமரத்தை அசக்கித் தகர்க்க அப்புயலாம் முயற்சியில் அது ஆறு பேருக்கு அபயமளித்து, முழுசாக இருபத்து நான்கு மணிநேரம் அவர்களை ஏந்தி வைத்துக் காப்பாற்றியதாம். இது இராமநாதபுர நிகழ்ச்சி!

அவ்வகையா ஆல்போல் தமிழ் நாடெங்கணும், புயலால் பாதிக்கப்படாமலேயே சுகமாக இருக்கிறார்கள். அவர்களது கடமை புயலால் பாதிக்கப்பட்டோர்களைக் காப்பாற்றுவது நம்மக்களை நாம்காப்பாற்று தவேறு யார்காப்பாற்றுவர்? ஆகவே அள்ளிக் கொடுக்கட்டும் அனைவரும். உற்ற கவலையொழிந்து துள்ளி குதிக்கட்டும் முன்போல் வாடிய மக்கள்!

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம் ரோடு

தஞ்சாவூர்

திராவிடன் சந்தா விவரம்

உள்நாடு.

ஆண்டு சந்தா ...	ரூ.	8	0	0
ஆறுமாதம் ...	ரூ.	4	0	0
தனிப்பிரதி ...	ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ.	9	0	0
ஆறு மாதம் ...	ரூ.	4	8	0
தனிப்பிரதி ...	ரூ.	0	3	6

கேள்வி? பதில்.

ஆத்திகவாதிகளின் அர்த்தமற்ற கூப்பாடு!

எம். மணவாளன், இராயபுரம்

கே: அஞ்சா நெஞ்சன் அவர்களே, நான் கேட்கும் இக் கேள்விக்கு விபரமாக பதில் சொல்ல முடியுமா? தென் ஜில்லாக்களில் புயல்—வெள்ளம் முதலியவைகளினால் உண்டான நஷ்டத்திற்கு ராஜாஜி பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த அறிக்கையில் "நம்மால் ஆவது ஒன்றுமில்லை இதெல்லாம் ஆண்டவன் செயல்' என்று சொல்லியிருக்கிறார் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்-கடவுளை மறந்ததால் தான் பொல்லாத புயல் வந்தது என்று மதுரை வட்டிக்கடைக்காரர்கள் கூட்டத்தில் பேசியிருக்கிறார் நிஜமாகவே கடவுள்தான் புயல் வெள்ளத்தை அனுப்புகிறாரா ?

ப: தோழரே, கடவுளால் உண்டாக்கப்படுவது என்று சொல்லப்படும் தீமைகள் அனைத்தையும் விஞ்ஞான அறிஞர்கள், தங்களின் முயற்சியினால் அழித்தொழித்து வருகின்றனர். இதனை நாம் அவ்வப்போது கண்டு வருகிறோம்.

உதாரணமாக 10 ஆண்டுகளுக்கு முன்புவரைகூட காலரா நோயினால் ஆண்டுதோறும் ஏராளமான மக்கள் மடிந்து வந்தனர். இந்தத் தொத்து நோய் ஏன் பரவுகிறதென்றால், மாரியாயிக்கு பூசை போடாததினால் ஏற்பட்ட கோளாறு என்றும், அதுபோலவே அந்த மாரியாயிக்கு ஆடு, கோழி வெட்டி திருப்தி செய்து விட்டால் நோய் பரவாது என்றும் அதற்காக பலவித மூடச் சடங்குகளையும் செய்து வந்தனர்.

இவ்விதப் பழக்க வழக்கங்களில் மலிந்திருந்தோர் பாமரமக்கள் மட்டும்தான் என்றும் கூறுவதற்கில்லை. மிகப் படித்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள் கூட பாமர மக்களையும் மிஞ்சுமளவுக்கு இப் போக்கில் இரண்டறக் கலந்திருந்தனர். ஆனால் இன்று காலரா நோயால் ஆண்டுதோறும் மக்கள் மடியும் கொடுமைக்கு ஏறத்தாழ முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டதென்றே கூறலாம்.

இதற்குக் காரணம் என்ன? மாரியாயிக்கு பூசை நைவேத்தியம் அதிகப்படியாகச் செய்யப்பட்டதா? அல்ல — காலரா தடுப்பு ஊசிகளையும், மற்றும் அதைப் போன்ற மருந்து வகைகளை நிபுணர்கள் கண்டுபிடித்ததால் இத் தொத்துநோய் கூடுமான அளவு குறைந்து வந்திருக்கிறதென்பதை வைதீகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்கூட வெளிப்படையாகக் கூறாவிடினும், மனதுக்குள்ளாவது ஒப்புக் கொள்வர்.

அதுபோலவே — ஆண்டவன் என்ற சொல்லின் மீது பழியைப் போட்டு ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு ஆண்டவனை தர்மகர்த்தா போல நியமித்து வந்த கண்மூடித்தனங்கள் இன்று மண்மூடி வருவதை பழைமையில் நம்பிக்கை கொண்டவர்கள்கூட முணுமுணுத்துக் கொண்டாகிலும் ஒப்புக் கொள்கின்றனர்,

கண்களிலே பழுது ஏற்பட்டால், சாமிக்கு தங்கத்தினால் கண்களைப்போல செய்து படைக்கிறோம் என்று ஆண்டவனிடத்திலே பேரம் பேசிவந்த பரம பக்தர்கள்—இன்று கண் சம்பந்தப்பட்ட மருத்துவ மனைக்குச் சென்றுதான் இழந்த பார்வையைப் பெறுகின்றனரே யல்லாது வேறில்லை.

எனவே, இயற்கைக் கோளாறினால் அல்லது சுகாதாரக் கேட்டினால் ஏற்பட்டு வந்த நோய்களுக்கெல்லாம் ஆண்டவனைக் காட்டி—அவருக்குப் பூசை செய்யாததால் ஏற்பட்ட கோளாறு—அல்லது நாத்திகம் பரவுவதால் விளையும் கேடு என்றெல்லாம் மக்களை ஏமாற்றி—குப்பையில் எறியப்படும் ரோமத்தைக் கூட ஆண்டவனுக்கு காணிக்கையாகக் கொடுக்க வேண்டுமென்ற கேடு கெட்ட பழக்க வழக்கங்களை வளர்த்து வந்தனர் வைதீகபுரியினர்.

ஆனால் இன்று அந்த கண்மூடி வழக்கங்களெல்லாம் மறைந்து மனிதன்—இயற்கையையும் மிஞ்சுமளவுக்கு விஞ்ஞான அறிவு பெற்று வருகிறான். பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரண விகிதத்தையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மக்கள் நோயினால் மடிவது எந்த அளவுக்குள் குறைந்திருக்கிறதென்பதை அனைவரும் உணரக்கூடும்.

இன்னும் சொல்லப் போனால் — நாட்டிலே நாத்திகம் மிக மிக வளர்ந்து வருகிறது என பழமை வெறியர்கள் போடும் கூப்பாடும் இந்த பத்து ஆண்டுகளில்தான் அதிகமாகத் தலைவிரித்தாடி வருகிறது.

எனவே — கடவுளை மறந்ததால் தான் புயல் வந்தது என்றோ — அல்லது புயல்—வெள்ளம் இதுபோன்ற நிகழ்ச்சிகள் உண்டாவது ஆண்டவனின் செயலேயல்லாது நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று ஆண்டவன்மீது பழியைப் போடுவதோ—அர்த்தமுள்ள செயலாகுமா என்பதைத் தாங்களே சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன். இந்த விதமான பேச்சுக்களை ஆச்சாரியாரானாலும்— ஓமந்தூரார் போன்றவர்களானாலும் அல்லது அவர்களை மிஞ்சின மகா பெரியவர்கள் மகான்கள் என்று கருதப்படுபவர்கள் கூறினாலும், அதைவிட கடைந்தெடுத்த பித்தலாட்டம் வேறாயிருக்க முடியாது என்பதைத் தாழ்மையுடன் குறிப்பிடவேண்டியவனாயிருக்கிறேன்.

ஓமந்தூரார் — ஆச்சாரியார் அல்லது பண்டாரங்களின் கூற்றுப்படி நாத்திகம் வளர்ந்து வருவதால்—கடவுளை மறந்ததால் தான் புயல் அடித்தது என்பது உண்மையானால் அவர்கள் மனதில் எண்ணிக்கூறும் அந்த 'நாத்திகம்'' நம் நாட்டில் எத்தனை ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிறது, என்பதை அவர்கள், ஆத்தகத்தின் போதையால் எண்ணிப் பார்ப்பதற்குக்கூட தங்களின் சிந்தனைக்கு இடம் அளிப்பதில்லையென்றே தெரிகிறது.

ஏனெனில்,—தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக நாகைப்பகுதியில் 1681ம் ஆண்டு கோரப் புயல் வீசி கொடுமை விளைவித்திருக்கிறது, இன்னும் சற்று வெளிப்படையாகக் கூறவேண்டுமானால், அந்த நாட்களில், புயலினால் ஏற்பட்ட கொடுமையிலிருந்து மக்களுக்கு உதவி செய்வதைவிட, வாழ்விழந்து தவிக்கும் மக்களிடமிருந்து பொருளைக் களவாடிச் செல்லும் வேறுபல அட்டூழியங்களும் தலைவிரித்தாடின. இந்த விவரம் நாம் மட்டும் கூறுவதல்ல—தேசிய ஏடாம்—தினமணியே எடுத்துக் காட்டுகிறது.

சமீப காலங்களிலே, ஏற்படும் புயல் கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்க ஏராளமான உதவிகள் செய்யப்படுகின்றன. ஆனால் 274 ஆண்டுகளுக்குமுன், (1681-ம் ஆண்டு) வீசிய புயலின்போது வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவதைப்போன்ற கேடுகள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அன்று நாட்டிலே நாத்திகக் கட்சிகள் இயங்கி வந்ததாலோ அல்லது அன்றுள்ள மக்கள் கடவுளை மறந்ததாலோ இந்த விபரீத நிலை ஏற்பட்டதென்று ஓமந்தூரார்களும் — ஆச்சாரியார்களும் கூற முடியுமா என்று கேட்கிறோம்.

சீர்திருத்தச் செம்மல் என்று போற்றப்படும் இராமலிங்கரின் காலம் நூறு ஆண்டுகளுக்கு முன்தான் என நாம் அறிகிறோமேயல்லாது 274 ஆண்டுகளுக்கு முன்பு என எவரும் கூறுவதற்கில்லை.

ஆகவே—வைதீகக் குட்டையில் ஊறியவர்கள், தங்கள் மனதில் திராவிட இயக்கத்தையும்—சுயமரியாதை இயக்கத்தையும் குறிப்பு வைத்தே மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடும் கோமாளிச் செயலில் இறங்கி புயல் கொடுமைக்கும்—கடவுள்களுக்கும் முடிச்சுபோட்டு ஓலமிடுகிறார்கள்.

சுயமரியாதைக் கொள்கை கொண்ட நாங்கள் பணிவன்புடன் அறைகூவல் விடுக்கிறோம், அதன்படி செய்ய ஓமாந்தூரார் அல்ல ஜகத்குரு என்று கூறிக்கொள்ளும் சங்கராச்சாரியார்களும் முன்வருவரா?

"நாட்டிலுள்ள மருத்துவ விடுதிகளையெல்லாம் மூடிவிட்டு, மருத்துவ நிபுணர்களையும் தங்கள் தொழிலையெல்லாம் நிறுத்திவிட்டு, காலரா நோயிலிருந்து, மற்ற எல்லா நோய்களையும் ஆண்டவனுக்குப் பூசைபோட்டு, அதன்மூலமே நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதை செயல் முறையில் காட்ட முன்வருவார்களா?''

அதுபோலவே "ஏரிக்கரைகளை ஒழுங்குபடுத்துவதிலிருந்து அணைக்கட்டுகளை அமைக்குப் பணிகளையெல்லாம் அடியோடு நிறுத்திவிட்டு, அப்பணியில் திறமைவாய்ந்தவர்களையும் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு செய்து, அந்த வேலைக்கெல்லாம் வேல்முருகனை நம்பித் தவங்கிடந்தே ஆவன செய்து விட முடியும்—மழையை வேண்டுமளவுக்கு குழாயில் தண்ணீர் பிடிப்பதைப் போல அளவாக பெய்துவைக்கவும், அதுபோலவே காற்று அளவுக் கேற்றபடி ஆண்டவன் மூலமாகவே பெற்றுக்கொள்ளவும் முடியும் என்பதைச் செயலில்காட்ட முன்வருவார்களா?

எனவே தோழர். மணவாளன் அவர்களே புயல்—பெரும் வெள்ளம் ஆகியவைகளால் உண்டாகும் கோரக் காட்சிகள் இயற்கையின் பருவக் கோளாறுகளினால் ஏற்படுபவைகளே யல்லாது கடவுள் செயலுமல்ல—கர்த்தரிகாயின் கோபமுமல்ல. இவ்வுண்மைகளை மக்கள் புரிந்து கொண்டால், தங்கள் பரம்பரையின் உலுத்த வாழ்வுக்கு குழிபறிக்கப்படுமேயென்றுதான் குல்லுக பட்டர்களும், சங்கராச்சாரிகளும் ஆண்டவனை இழுத்து வம்பில் சிக்கவைக்கின்றனர். ஆனால் ஓமந்தூர் ராமசாமி போன்ற நல்லவர்களோ வைதீகக் குட்டையில் ஊறிய மட்டையிடம் இருந்து கசியும் அழுக்கு நீரைப்போல அப்பாவி தன்மையுடன் வரட்டுக் கூச்சல் போடுகின்றனர்,

தவிர, புயல் கொடுமைக்கு, ஆண்டவன் தான் காரணம் என்று கூறப்படுவது உண்மையானால் அந்த ஆண்டவன் இப்போது தமிழகத்தில் தலைமறைவாகத் திரிந்து கொண்டிருக்கிறார் என்றாலும்கூட இ. பி. கோ. பிரிவின்படி அந்த ஆண்டவனுக்கு நீதி மன்றத்தில், ஜன்ம தண்டனையோ—அல்லது தூக்குத் தண்டனையோதான் கிடைக்கும் என்பதை இந்த போலி ஆத்திகர்களின் புத்தியில் ஏறுவதில்லைபோலும்!

அது மட்டுமல்ல, வீணாக ஆண்டவன் பெயரைத் தீராப் பழிக்கு ஆளாக்கப்படுவதற்கு ஆண்டவன் உயிரோடிருந்தால் இந்த ஆத்திகர்கள்மீது நஷ்ட ஈடு வழக்குக்கூட தொடருவார் தோழரே—போதுமா விளக்கம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம், 16/94, [illegible] கோயில் தெரு, சென்னை-1